உ

சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. | 1092 வைகாசி: திருவனந்தபுரம்: JUNE 1917. | பகுதி 4

பொருள் அடக்கம்.

விஷயம்.		பக்கம்.
1.	The age of the third Tamil Sangom	61
2.	Indian Architecture	64
3.	ஆகாய விமானங்கள் ...	65
4,	தற்கால யுத்தப் படிப்பினைகள் ...	71
5.	நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம்	74
6.	மாய மறைவு	77
7.	மனக்கவலையும் தேகசுகமும் ...	80

சந்தா விவரம்.

இந்தியா, இலங்கை, இரங்கூன் ரூ. 2
வெளிநாடுகளுக்கு ரூ. 3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

T. Nagasubramania Rao Bros,
PUBLISHERS, TRIVANDRUM.

THE "TAMILIAN"

A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subscription Rs. 2.

Strictly payable in advance.

SHORT STORIES: a speciality.

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	„	3—0—0
Quarter page or ½ column	„	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr. C. N. Ananta Ramaiya Sastri, M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. NAGASUBRAMANIA RAW BROS.,

Publishers, Trivandrum.

THE AGE OF THE THIRD TAMIL SANGAM.

Mr. K. G. Sankara Aiyar B. A. & B. L.

THE age of the 3rd Tamil Sangam has been variously assigned to the 2nd, 5th and 8th cents. A. C. As for the recent theory assigning the 'Silappadigaram, to 282 Kali, besides that it places the Sangam age 2000 years before Buddha whose reappearance is alluded to in 'Manimekalai', it fails to satisfy even the astronomical conditions. The 5th cent theory has been sufficiently refuted by Mr. K. S. Srinivasa Pillai in the 'SenTamil'. Some of the arguments therefor tend rather to confirm the 2nd cent date. The destruction of Pataliputra was due to its abandonment as capital by the Guptas and the Hunic invasion of the 5th cent A.C. and not to its flooding by the Ganges. The passage from 'Agananuru' that Mr. Raghava Aiyengar quotes in his support has no reference whatever to the flood but only to the hiding of their wealth in the bed of the Ganges by the Nandas. Since the secular Sangam works dealing with love and war omit all mention of the Pallavas, and since the Sangam Chola Kings from Karikala to Tondaiman Ilandiraiyan ruled over Kanchi, while the Pallava Kings also ruled at Kanchi continuously from c. 200 to 900 A. C. except perhaps in the 6th cent A. C. when the Cholas were too weak to dispossess the Pallavas of Kanchi we must infer the Sangam age was prior to 250 A. C.. The Sangam age must be long prior to 470 A.C. for it to be revived in that year, if it was so in fact, by Vajranandin. Kauralaka Mantaraja mentioned in Samudragupta's inscription who ruled on the banks of the Colair lake, can in no case be identified with Mandaran Seral. Even if 'வம்பமோரியர்' means new mauryas, it cannot refer to the Guptas, for they were in no way connected with the mauryas, and the Andhras were extinct a century before they began to rule. If Samudragupta was defeated by the Cholas and Pandyas, why should the latter and their poets refrain from boasting of it? The authenticity and date of the 'Kalaviyalurai' has not been established, and 'இச்சனம் வருகின்றதாவர' suggests that the list of disciples mentioned therein is not exhaustive. So no inference can be drawn from this fact. If Chandragupta II annexed Malva in 388 A.C., how could there be any Kannar to help Senguttuvan in the 5th cent A. C.? Since they were found ruling in Malva in C. 350 A.C., they might have been ruling there in the 2nd cent A.C. also. 'நூற்றுவர் கன்னர்' cannot refer to Yajnasri, because it is in the plural, Yajnasri was a Satâkarni, not a Sâtâkarni, he did not rule over Malva which was then under the Sakas and began to rule only in 175 A.C. while Senguttuvan's northern expedition took place in 157-160 A.C. திதியன் of Arandai on பொதியன்மலை cannot be ததியன் of Ceylon who ruled 990 years after Buddha i.e. in 500 A. C. and not in the 5th cent A.C. Thus the 5th cent A.C date is certainly untenable.

Since none of the Sangam Kings are recognisable in the list of Pandyas given in the Sinnamanur and Velvikudi grants which moreover ascribe Nedunjezhiyan's victory at Talaiyalanganam to one of the unnamed ancestors of the Pandyas mentioned there in the Sangam age is not later than 500 A. C. All these later Pandyan Kings bore highly Sanskritised names, while the Pandyas of the Sangam age were known by purely Tamil names. None of the Sangam Cholas are recognisable in the list of Chola Kings after Vijayalaya (846 A. C.) In 640 A. C. Hiuen Thsang found them a petty race at Cuddapah, while they were powerful Kings in the Sangam age. Appar refers to the story of the Sangam King Sengannan having been a சிலந்தி in his previous birth and to the 'தருமிக்குப் பொற்கிழியளித்த வரலாறு' connected with Nakkirar's life. The find of Roman coins in S. India is continuous from B. C. 40 to 235 A. C. and again from 325 to 500 A. C. This probably indicates the struggle for supremacy between the Pallavas and the Kings of the Sangam age in the period 235 to 325 A. C. Ptolemy, in 130 A. C. mentions the land of ஆய் and 5 of its seaports. Since both ஆய்அண்டிரன் and ஆய்எயினன் were Kings of the Sangam age, the Sangam age must be sought for in the 2nd cent A. C. Buddhism was flourishing in the time of 'Manimekalai' while it had already begun to decay in the time of Fahian (c. 400 A. C.) and had become extinct in South India before 700 A. C. Senguttuvan is said to have conquered many independent Kings of Northern India, among whom no Gupta King is included. This would be possible only before C. 300 A. C. when the Guptas who were sole rulers of North India from 300 to 500 A. C began to rule. The Tiruvilaiyadal Purana places the beginning of the Sangam age 27 generations and Nakkirar 15 generations before Sambandha (c. 650 A. C.). Thus the Sangam age would be from C. 150 B.C. to 200 A.C. Mr. K. P. Jayaswal has fixed the date of the death of Buddha as 544

600090

B. C. and of Asoka's coronation as 271 B. C. which latter is also confirmed by the mention of some contemporary Greek Kings in 2 of Asoka's rock edicts. But since the Ceylon chronicles place Asoka's coronation 218 years after the death of Buddha, for purposes of chronology at least we must suppose the date of Buddha's death to be 489 B. C. which excludes 487, 483 and 478 B. C. the dates proposed by Mr. Smith, Dr. Fleet, and Mr. Swamikannu Pillai. The last fails to satisfy even the astronomical data on which it is based From the facts that Srimeghavarna and Buddhadasa of Ceylon were contemporary with Samudragupta and Fahian respectively, it is seen that 489 B. C. is the correct date for chronology. The 'Silappadigaram' says Gajabahu of Ceylon attended the inauguration of Kannagi worship by Senguttuvan, while the 'Rajavali' says of Gajabahu I that he brought back with him from India Pattini Devi's (i.e. Kannagi's) foot ornaments. Gajabahu is not a title of the Kings of Ceylon but a personal name, and the very reliable 'Mahavamsa' mentions only another Gajabahu who however lived late in the 12th cent A. C. According to the 'Dipavamsa' Gajabahu I ruled from 154 to 176 A. C. so the Sangam age must be the 2nd cent A. C. Mr. Sami Kannu Pillai arguing from some astronomical date in the text and commentary of Silappadigaram', assigns 756 A. C. to the events mentioned in that work. But the data form an impossible combination. Th commentator makes mutually contradictory statements. There is no evidence that they were handed down by tradition, since the அரும்பதவுரையாசிரியர் does not mention them. The commentator contradicts the text in some of these data, and Mr. Swamikannu Pillai has to twist every one of these statements from their plain meaning before his results can be made to suit them. His date fails to satisfy even the conditions of the text. I have the authority of Mr. Swaminatha Aiyar also for the statement that these data form an impossible combination. To maintain his case, Mr Pillai has to assume that the tithi and nakshatra of a day need not necessarily be its tithi and nakshatra at sunrise, that the commentator, instead of handing down a tradition, arrived at the data by retrospective calculation, thus contradicting his own former statement, that the Indra festival, instead of being regulated, as usual, by the month and tithi or Makshatra, was governed by the principle of 'Saturday nearest to the fullmoon at the end of Chittirai', that Adiyarkunallar was giving the conventional and not the actual tithi and nakshatra, though his professed object is to give the course of events in that particular year, that 'Tuesday night' means 'Monday night' that a subsequent nasa yoga may affect the destinies of the travellers, that in former times they may have considered the sankranti with reference to the actual moment of sunset, and that 756 and 771 A. C. are the correct dates thus begging the question. His date for the 'Jivakachintamani' 813 A. C. is, however correct and is the only date which satisfies the astronomical data in that work in all the period from 1 to 1000 A. C. Again, with reference to the 'Manimekalai', Mr. Swamikannu Pillai assumes that Buddha's reappearance was to take place, contrary to the evidence of the text itself, about the time of the events mentioned in 'Manimekalai', that the passages referring to the appearance of Buddha's begging bowl and Aputtiran's birth on Buddha's anniversary day, really refer to Buddha's reappearance, that such reappearance refers to his sambodhi and not his birth, that "இரு பத்தின்மேலும் ஒரு மூன்று சென்றபின்" means the 13th and not the 14th and refers to the solar day of the month instead of tr the nakshatra and that the traditional date of Buddha's death in South India was not 544 B. C. the traditional date of India, Burma, Siam and Ceylon but 850 B. C. the traditional date of China which to suit his own purposes he changes to 846 B.C. Since 'Manimekalai' refers to Visakha as the 'middle' nakshatra it cannot be lateo then 500 A. C. when Chitra came to occupy that place. Mr. Swami Kannu Pillai maintains, with Dr. Fleet, that weekdays were not in common use in any part of India before the 8th cent A. C. from the merely negative evidence of inscriptions, that they were altogether unknown in India before 400 A. C. and that they were borrowed from the Greeks. No evidence whatever is adduced for these latter statements. But Sambandha mentions all the planets in their weekday order. (The contention that Sambandha used only the Krittikadi order of nakshatras is groundless). Most of the Puranas mention the full list of planets. The 'Matsya', 'Padma', and the 'Vishnu' take the planets in their weekday order. The 'Vaikhanasa Sutra', quoted in the 'Manusmriti' which from its mentioning the Andhras and Licchivis as outcastes must have been composed in c. 250 A. C., mentions Budhavara i.e. Wednesday. (If the 'Vaikhanasa Sutra' mentions the worship of Narayana, so do the Manusmriti and Bhasa's plays which are quoted in the Kautiliya Arthasastra c. 300 B. C.) Since the

Arthasastra' omits mention of the weekdays alone in its divisions of time, the latter must have been borrowed from the Chaldeans in the 3rd cent B. C. and not from the Greeks or the Romans who know their use only in the 3rd cent A. C. The rasis also must have been borrowed from the Chaldaeans and not the Greeks since Bodhayana (5th cent B. C.) mentions them long before Alexander's invasion. If the Hindus had borrowed the weekdays only in 400 A. C., it is impossible that they could have affected their cosmic conceptions so profoundly already in 450 A. C. as is evident from the Indian siddhantas. From 150 to 200 A. C., only 157 A. C. and 162 A. C. for 'Silappadigaram' and 'Manimekalai' satisfy, the astronomical data found in both works, the possibility of Gajabahu's attending the inauguration ceremony and other circumstances as to the age of Manimekalai, time intervals etc., found in the 2 works. Thus Kovalan died in 157 A. C, Senguttuvan's northern expedition took place in 157 to 160 A. C., the inauguration of Kannagi worship was in 160 A. C., the events mentioned in 'Manimekalai' took place from 162 A. C. to 165 A. C. at the latest, Senguttuvan ruled from 130 to 165 A. C. and Gajabahu from 154 to 176 A. C. The authors of the two works were friends and contemporaries and probably died before 200 A. C. Since Tiruvalluvar is quoted in both the works, he must have lived before 150 A. C. From references to the loss of some Pandya territory by the flooding of the ocean in 'Kalittogai' and 'Silappadigaram', and from references to some such flood in the Mahavamsa' and 'Rajavali' it is possible to infer that the Sangam age began in c. 200 B. C. We may thus conclude that the Sangam age extended from c. 200 B C. 200 A. C. The subject will be dealt with in detail in English and Tamil in the pages of the 'Quarterly journal of the Mythic Society' and the 'Sen Tamil' and it is therefore and for want of space in this little journal, that we have given only a bare outline of our arguments and method of inquiry, which on the face of it perhaps seems dogmatic but is really supported by full and weighty evidence.

INDIAN ARCHITECTURE.

Of all sciences and arts that relate to people, Architecture is conspicuous by its intrusive grandeur. But like all other sciences and arts, Architecture to be appreciated and studied has to be handled by researchers and interpreted to the world at large. This being so, it is a task deserving encouragement that has been eminently performed by the compiler Mr. A. Tyagaraja Aiyar and the editor Mr. M. A. Ananta Alvar B. A., A.C.E., B C.E , of the "Indian Architecture" magazine. Architecture reveals to us the history of man and the races of men and the two parts published have distinct theories, opinions and conclusions regarding the original abode of the Aryans and a multitude of other facts and circumstances that concern India and the rest of the world. Our Puranas contain much of history, science, geography and general culture, if only we are able to sift the essentials of fact from the essentials of poetry and religion, morals and philosophy that have been blended in them. This is a very huge task but some should sit to work at it, since the Indians who have had a more ancient civilised life than other peoples and who retain the essence of it amidst all the changes of a changing world did not care to write works on historical and geographical subjects clearly. Besides, Architecture by itself is a very ennobling art and its secrets have to be threshed out thus.

It goes without saying that the Magazine, but for the war, would have found a place in hundreds of institutions in Europe and America. Even as it is, it is bound to be recognised in those places, for the knowledge it conveys, and the illustrations it contains. But what we would be proud of is the extent of support it wins at the hands of our own public, rich and otherwise.

There will be difference of views regarding many things said in these volumes, but the publication of one's views is the only way of getting them accepted sooner or later with or without modification by others.

May success attend the publication should be the prayer of all of us.

C. N. A. Ramaiya Sastri M. A.

ஆகாய விமானங்கள்.*

ஸ்ரீமாந் T. V. நீலகண்டப்பிள்ளையவர்கள் B. A.

நம்முடைய நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கிவரும் காவியங்களில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களில் முற்றிலும் நம்பக்கூடாதது என்று இதுகாறும் கருதப்பட்டிருந்த ஒரு விஷயத்தின் உண்மை இவ்விருபதாம் நூற்றாண்டில் உள்ளங்கை நெல்லிக்கனியென மிக வியக்கத்தக்கபடி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நமது புராணங்களில் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து செல்லும் விமானங்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றதாயினும் அப்படியான ஆகாய சஞ்சாரம் அசாத்தியமானதல்ல என்று இப்பொழுதுதான் நமக்குத் தெரியவந்தது.

ஆகாயத்தில் பறந்து செல்லக்கூடிய திறமை தற்காலத்து நாம் பெற்ற பெரும்பேறுகளில் ஒன்று. இதைப்பற்றிய அநுபவங்கள் மிகப் புதியன ஆயினும், இப்பொழுது நடந்தேறும் மிகக் கொடிய ஐரோப்பிய யுத்தத்திலே ஆகாயவிமானங்கள் மிகுதியாக உபயோகப்படுத்தப் படுகின்றன.

இயற்கையை வெல்வதே எப்பொழுதும் மனிதனுடைய கருத்து. மனிதன் ஆதிகாலம் தொடங்கியே இயற்கையின் இரகசியங்களை உய்த்தறியும் நோக்கத்தையுடையவன். அந்நோக்கத்துடன் மிக ஊக்கமாக நம்முன்னோர்கள் உழைத்ததின்பயனாக அதிசயப்படக்கூடிய அரிய பேறுகளை நாம் பெற நேரிட்டது. நீராவியின் வல்லமையைச் செவ்வனே அறிந்தவுடன் இடம் காலம் என்பனவற்றை இம்மட்டோ என்று இகழச்செய்கிற புகைவண்டி புகைக்கப்பல் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன மின்சாரத்தின் இயல்பும் குணமும் தெரிந்துகொள்ளவே, க்ஷணநேரத்தில் ஆயிரக்கணக்கான மைல் தூரம் சமாசாரம் தெரிவிக்கும் வல்லமையுள்ள மின்சாரத்தபால் (Electric Telegraph); அதைவிடப் பன்மடங்கு வியக்கத்தகுந்ததும் தந்திக்கம்பிகளின் உதவிவேண்டாததும் திரைகடலோடித் திரவியம் தேடும் கப்பல்களின் நன்மைக்கு இன்றியமையாததுமான Wireless என்ற "தந்தியில்லாத் தபால்"; சூரியவெளிச்சம் ஊடுருவிச்செல்ல முடியாத தோல், மாமிசம், மரம், இரும்பு ஆகிய பொருள்களையும் ஊடுருவிச்சென்று அவற்றிற்கப்புறம் இருக்கும் பொருள்களை நம் கண்ணுக்குத் தெரிவிக்கக்கூடிய வல்லமையுள்ள Rontgen Rays என்னும் மின்சார வெளிச்சமும், இவை போன்ற பிற நன்மைகளும் நமக்கு வாய்த்தன. மனிதன் இவ்விதமாக ஒவ்வொரு பூதங்களையும் வென்றான்; ஆகாயத்தைமட்டும் வெல்ல முடியாது திகைத்தான்.

ஆதியில் பறவைகளைப்போல இரக்கைகளின் உதவியால் பறந்து செல்ல முயன்றார்கள். ஆயின் போதுமான அளவு பெரிய இரக்கைகளை அசைத்துச் செல்லப்போதிய வல்லமை மனிதன் தசை (Muscles)களுக்கில்லையாகையால் அது முடியாது போயிற்று.

1766-வது வருஷம் ஒரு முக்கியமான விஷயம் கண்டுபிடிக்கப்பட்டது. ஹைட்ரொஜன் (Hydrogen) என்ற பெரிய வாயு காற்றைவிடப் பன்மடங்கு இலேசானது என்று (Cavendish) என்ற சாஸ்திரக்ஞர் அவ்வருஷத்தில் வெளியிடவே, பதினாறு வருஷங்களுக்குப்பின், அதாவது 1782-ல், Cuvallo என்பவர் இந்த வாயு நிறைந்த ஸோப் குமிழிகள் ஆகாயத்தில் உயர்ந்து எழும்பும் தன்மையுடையன என்று தெரிவித்தார். இது தெரியவரவும் ஆகாயப் புகைக்கூண்டுகள் (Balloons) செய்துமுடிக்க நேரிட்டது.

மிகவும் லேசான வஸ்துவால் செய்யப்பட்டதும், வாயு ஊடுருவிச் செல்லமுடியாததுமான ஒரு பெரிய கூண்டு 'ஹைட்ரொஜன்' என்ற வாயுவால் நிரப்பப்பட்டால் உயர்ந்து எழும்புவதோடு மனிதர்களையும தூக்கிச் செல்லக்கூடியதாயிருக்கும் என்று தெரிந்து சாரல்ஸ் (Prof. Charles) என்ற சாஸ்திரபண்டிதர் ஒருவர் அவ்வகையான விமானம் ஒன்று செய்து தாம் அதில் ஏறி ஆகாயத்தில் உயர்ந்து எழும்பினார்.

காங்கையேறிய காற்று சாதாரணக் காற்றைவிடச் சற்று இலேசானதாகையால், விலையேறிய 'ஹைட்ரொஜனு'க்குப்பதில் அதனை உபயோகித்து ஆகாயக் கூண்டுகள் செய்யக்கூடும் என்ற விஷயத்தையறிந்து, பாரிஸ் பட்டணத்தில் 1783-ம் வருஷத்தில் மாண்ட்கால்பர் (The Brothers Montgolfer) என்ற சகோதரர்கள் காங்கையான காற்றை உபயோகித்து தாம் செய்த ஒரு புகைக்கூண்டில் மேலே சென்றார்கள்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து ஊகித்து அறிந்

* All rights reserved.

துகொள்ளக்கூடிய குறை ஒன்று இப்புகைக்கூண்டுகளினிடத்துக் காணப்பட்டது. உயர்ந்து செல்லும் வல்லமையுடையனவாயினும், உயர்ந்தபிறகு வேண்டியவிடத்து வேண்டியபடி திருப்ப வசதியில்லாதொழிந்ததால் இக்கூண்டுகள் மனிதர்கள் போக்குவரவுக்கேற்றவையாய் இருக்கவில்லை. இவைகள் காற்றில் உயர்ந்து எழும்பி காற்று தம்மை அடித்துக்கொண்டு போகும் திசைக்குப் போகுமேயல்லால் அவற்றை குறிப்பிட்ட ஒரு இடத்தை அடையச் செய்வது முடியாத காரியமாக இருந்தது.

இக்குறையீனது சில வருஷங்களுக்குமுன் நீக்கப்பட்டு, குறித்த இடத்துக்குப் போகக்கூடிய ஆகாயக்கப்பல்கள் இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றன. இதை முதலில் செய்துமுடித்தவர் ஜெர்மானியதேசத்தவரான செப்பலின் (Count Zeppelin) என்ற பிரபு. இவர் பெயரே இவ்வகை விமானங்களுக்கு வழங்குகிறது.

செப்பலின்: செப்பலின் என்று அழைக்கப்படும் ஆகாயக்கப்பலும் பழைமைவாய்ந்த புகைக்கூண்டும் காரியத்தில் ஒன்றேயாயினும், தோற்றத்தில் மிக்க வேறுபாடுடையன. புகைக்கூண்டுகள் கோளவடிவமானவை; செப்பலின்களோ பருத்து நீண்ட உருவத்தை உடையன. இந்த நீண்டுருண்ட பாகத்திலே ஹைட்ரோஜன் வாயு அடைக்கப்பட்டிருக்கிறது. இப்பாகம் 20 அல்லது 25 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். குடைத்துணியானது நன்றாய் விரிந்து நிற்கும்படி எப்படிக் கம்பிகள் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே செப்பலினில் இருக்கும் ஹைட்ரோஜன் பைகளும் உறுதியாய் இருக்கும்படி அவற்றுள் "அலியுமினியம்" (Aluminium) என்ற கனங்குறைந்த உலோகத்தால் செய்யப்பட்ட கம்பிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இருப்பதால் அவற்றுள் ஒன்று கிழிந்துபோக நேரிடினும் மற்றவைகள் வாயுவை வெளிவிடாது கப்பலைத் தாங்கிக்கொள்கின்றன.

செப்பலின் என்ற விமானத்தின் ஹைட்ரோஜன் அறை மிகப் பெரிய உருவமுடையது. அதன் நீளம் 55 முதல் 600 அடிவரையும், சுற்றளவு 240 அடி முதல் 300 அல்லது 400 அடிவரையும் இருக்கும். இந்த அறையைச்சுற்றி நாற்புறமும் மனிதர் நடந்து செல்லக்கூடியபடி விசாலமான 'வராந்தா' அமைக்கப்பட்டிருக்கிறது. அறையில் இருந்து இரண்டு பெரிய வாகனங்கள் தொங்குகின்றன. இவற்றுள் ஒன்றில் 650 முதல் 870 குதிரைப்பலம்வரைக் (Horse-power) கொண்ட மூன்று அல்லது நான்கு எஞ்சின்களும் மற்றியந்திரங்களும் வைக்கப்பட்டிருக்கும். இவ்வியந்திரங்களின் உதவியால் கப்பலானது இயக்கமுறுவதோடு, முன், பின், இடம், வலம் என்ற எல்லாத் திசைகளுக்கும் திருப்பக் கூடியதாக இருக்கிறது. இன்னொரு வாகனம் மனிதர்கள் இருப்பதற்கும் சாமான்கள் வைப்பதற்குமாக அமைந்தது.

இதுகாறும் கூறிய விமானங்கள் காற்றினும் கனம் குறைந்தவை; தாமே உயர்ந்து எழும்பக்கூடியவை; இவை ஒருசார். காற்றைவிடக் கனம் மிகுந்ததும் தாமாய் உயர்ந்தெழும்பும் வல்லமையில்லாததுமான இன்னொருவகை விமானங்களும் இருக்கின்றன. இவைகள் தாம் 'எயிரோப்லேன்' என்றழைக்கப்படுவன.

எயிரோப்லேன்: சிறுகுழந்தைகள் ஆகாயத்தில் பறக்கச்செய்கின்ற காற்றாடியின் அமைப்பும் 'எயிரோப்லேன்' என்ற ஆகாயவிமானங்களின் அமைப்பும் அநேக விஷயங்களில் ஒன்று. விசாலமான பரந்த பொருள் ஒன்றை, முற்றிலும் மட்டமாய் இராமல் ஒரு நுனி சற்றே உயர்ந்திருக்கும்படி வைத்து மிக விரைவாக அதை முன்னுக்குப் போகும்படி செய்தால், ஆகாயம் அதன் அடிப்பக்கத்தில் தாக்குவதினால் உண்டாகும் பாரம் (pressure) ஆகர்ஷணத்தின் சக்தியை நிஷ்பலமாக்குவதினால் அந்தப்பொருளானது உயர்ந்து எழும்பக் கூடியதாகவிருக்கிறது. இதுவே 'எயிரோப்லேன்' என்னும் விமானத்தின் அமைப்பு ரகசியம். இவ்விமானங்களுக்கு ஹைட்ரோஜன் தேவையில்லை. ஆகையால் ஆகாயக்கப்பலில் இருக்கும் நீண்டுருண்ட ஹைட்ரோஜன் அறையும் அவசியமில்லை. இந்த விமானங்கள், இறக்கைகளோ என்று எண்ணக்கூடிய இரண்டு பெரிய தட்டையான பொருள்களையும், அவை இரண்டுக்கும் நடுவில் சில இயந்திரங்களையும் உடையன என்று பொதுவாகக் கூறலாம். புறப்படுவதற்கு முன்னே எயிரோப்லேன் ஆனது தரைமீதிலே பைசக்கிள் சக்கரங்கள் போன்ற இரு சக்கரங்களால் தாங்கப்பட்டு நிற்கும். புறப்பட வேண்டிய நேரத்தில் "எஞ்சின்"கள் விமானத்தை முன்னுக்குச் சிறிது தூரம் ஓட்டும்; அதற்குள்ளே

மேல் எழும்பும் வல்லமை இரண்டாய்விடுகிறது. உடனே, எழும்பிச்செல்லும் எஞ்சின்கள் இயங்கிக்கொண்டேயிருக்க விமானமும் பறந்து செல்வதோடு, மாலுமி வேண்டும் இடத்திற்கு அதைத் திருப்பக் கூடியதாகவும் இருக்கிறது. எந்த உயரத்திலும் செல்லவல்லது; எவ்வளவு திடீரென்றும் திருப்பக்கூடியது ; ஆனால் கனத்த பொருள்களையும் பெருத்த சுமையையும் கொண்டுபோகவல்லது அன்று. ஒன்று அல்லது இரண்டு மனிதர்களையும் சுருக்கமான சுமையையும் மட்டுமே எடுத்துச் செல்லும் வல்லமையுடையது.

இவ்வகையான விமானத்தில் ஆதியில் பறந்து சென்றவர் ப்லேரியட் (Bleriot) என்ற பெயரிய பாரீஸ்வாசி. 1909-ல் 'கலே' (Calais) என்கிற பட்டணத்தில் இருந்து 'டோவர்' (Dover) என்கிற பட்டணத்துக்கு இவ்விமானத்தில் பறந்தது அக்காலத்து மிக வியப்பாகவே இருந்தது. இவ்விருபட்டணங்களுக்கும் நடுவில் 24 மைல் அகலம் உள்ள ஆங்கிலக் கால்வாய் (English Channel) ; இதை 40 நிமிஷநேரத்தில் கடந்தார். அவருடைய 'எயிரோப்லேனில்' வைத்திருந்த எஞ்சின் 25 குதிரைப்பலம் உடையது. இவ்வகை விமானத்தின் வல்லமையைச் சிறிதும் பரீக்ஷித்தறியாத அக்காலத்தில் அவருடைய செய்கை மிகத் துணிகரமாகவே தோன்றிற்று.

அதுமுதல் காற்றினும் கனத்த இவ்வகை விமானங்கள் பிரபலமாயின. ஒவ்வொரு சாதியார்களும் இவ்விமானங்களைச் செய்யத் தலைப்பட்டனர். இதுகாறும் செய்யப்பட்டவையில் மிகப் பெரிது என்று மதிக்கப்படுகிற Sikorsky Bi-plane என்ற விமானத்தின் நீளம் 65 அடி ; கனம் 3½ டன் அல்லது 7840 ருத்தல் ; 400 முதல் 600 வரை குதிரைப் பலமுள்ள 'எஞ்சின்' நான்கு உடையது ; 16 மனிதர்களை ஒரு மணிநேரம் எடுத்துச் சென்றது. சாதாரணமாக 8 மனிதர்கள் அதில் போவார்கள். ஆனால் 'எயிரோப்லேன்' எல்லாம் இவ்வளவு பெரிதாக அமைக்கப்படுவதில்லை. ஒன்று அல்லது இரண்டு மனிதர்களை ஏற்றிச் செல்ல எவ்வளவு சிறியதாகச் செய்ய முடியுமோ அவ்வளவு சிறியதாகவே செய்யப்படுகின்றன.

இவ்விருவகையான விமானங்களும் தற்கால யுத்தத்திலே உபயோகப்படுகின்றன. பொதுவாகக்கூறுமிடத்து செப்பலின்கள் ஜெர்மானியர்களாலும், எயிரோப்லேன்கள் ஆங்கிலேயர்களாலும் ஐக்கிய கட்சியாராலும் உபயோகப்படுத்தப்படுகின்றன என்னலாம். யுத்தம் ஆரம்பிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னேயே ஜெர்மானியர் செப்பலின் செய்வதில் தம் கவனத்தையும் பொருளையும் செலவுசெய்தனர். மற்ற ராச்சியங்களில் செப்பலின்கள் அவ்வளவு ஏராளமாகச் செய்யப்படவில்லை. வேடிக்கைக்காக மட்டும் சில எயிரோப்லேன்கள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் செய்யப்பட்டன. இப்பொழுது இருக்கின்ற நிலைமையைக்குறித்துப் பேசுகையில், ஜெர்மானியர்களின் முக்கிய ஆகாயவிமானங்கள் 'செப்பலின்'கள் என்றும் நம்மவர்களின் முக்கிய விமானங்கள் 'எயிரோப்லேன்' என்றும் சொல்வதில் தடையில்லை.

யுத்தசமயத்தில் ஆகாயவிமானங்கள் செய்யக்கூடிய வேலைகளில் மிகவும் முக்கியமானது வேவு அறிதல். எதிரியின் நிலையையும், அவன் செய்கையையும் எவ்வளவு தூரம் நன்கறியக்கூடுமோ அவ்வளவு அறிந்துகொள்ளல் வெற்றிக்கு சாதகமான காரியங்களில் ஒன்று. எந்த இடத்தில் எதிரியின் பீரங்கிகள் எத்திசையில் அமைக்கப்பட்டிருக்கின்றன ; எதிரிக்கு ஆகாராதிகள் வரும் பாதையெது ; எவ்வெப் பக்கங்களில் நெருங்கின சண்டை நேரிடக்கூடியதாக இருக்கிறது ; என்பனவாதிய விஷயங்களை ஆகாயவிமானங்கள் தத்தம் சைனியங்களுக்குத் தெரிவித்துக் கொண்டேயிருக்கின்றன. இவ்விஷயங்களை அறிந்துகொள்வதற்கு எதிரியின் நாட்டுள் செல்வது இன்றியமையாத காரியம் ஆகையால் அதைச் செவ்வனே செய்துமுடிக்கும் வல்லமை ஏனைய விமானங்களைவிட இதற்கு மிகுதியாய் இருக்கிறது. பெரிய உருவத்தையும் எளிதில் கிழிந்துபோகக்கூடிய ஹைட்ரோஜன் அறையையும் உடைய செப்பலின்கள் எதிரியின் நாட்டில் பகல் நேரம் சென்று பிழைத்துத் திரும்புவது அருமை.

ஆகாயமார்க்கமாய்ச் செல்கின்ற வேவுகாரர்கள் மிகுந்த மனோதைரியமுள்ளவர்களாக இருக்கவேண்டுவது மிக அவசியம். நூறு இருநூறு அடி உயரமான கோபுரங்களின் உச்சியில் இருந்து தரையைப் பார்க்கையில் அசசமடையாதவர்கள் மிகச் சிலரே. இவ்வாகாய வேவுகாரர்கள் (Air-Scouts) செல்லும் உயரமோ 6000 அடி ; அவ்வுயரத்திலும், வாயுவேகம் மனோவேகம் என்றபடி ஒரு மணிநேரத்துக்கு நூறு மைலுக்கு மிகுந்த விரைவாகப் பறந்துசெல்ல வேண்

டியதாக இருக்கிறது. அம்மட்டோ? அவர்களால் கவனிக்கப்படவேண்டும் காரியங்கள் மிகப்பல. தாம் போகின்ற பொழுது தமக்குக் கீழே இருக்கும் பூமி எதிரியின் கைவசம் இருப்பதால் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளக்கூடியவையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்; விமானம் 6000 அடி உயரத்தில் இருப்பதினாலும் வெகு விரைவாகச் சென்று கொண்டிருக்கிறதினாலும் பூமியைப் பார்க்கின்றவர் மிகக் கவனமாகவும் நுட்பமாகவும் பார்க்க வேண்டும்; பார்ப்பதோடு கண்டவைகளில் முக்கியமானவைகளைப் பற்றிக் குறிப்புகளும் படங்களும் எழுதிக்கொள்ள வேண்டும்; பின்னும் புகைப்படங்கள் (photos) எடுத்துக்கொள்ளவும் வேண்டும். இதற்கிடையில் தம் சைனியத்திலிருந்து (Wireless) வர்த்தமானம் ஏதாவது வந்தால் அதை ஏற்றுக்கொண்டு, முக்கியமான விஷயங்கள் ஏதாவது சைனியத்துக்கு அப்பொழுதே தெரியப்படுத்தவேண்டியதாக இருந்தால் Wireless தந்தி அனுப்பவும் வேண்டும். இவ்வேலைகளைச் செய்யும்பொழுதே எதிரியின் ஆகாயப்பீரங்கிகள் (Anti-aircraft guns) ஏதாவது தமக்குத் தீங்கிழைக்கக்கூடிய அண்மையில் இருக்கின்றனவோ என்றும் கவனிக்கவேண்டும்.

தண்ணீரில் மூழ்கிச்செல்கின்றதும் வியாபாரக்கப்பல்களுக்கும் பிரயாணக் கப்பல்களுக்கும் தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறதாக நாம் கேள்விப்படுகிறதுமான (Submarines) என்ற முழுகுதோணிகள் தண்ணீர்க்குள் இருப்பதை கப்பல்களில் இருந்தபடியே காண்பதரிது; அவற்றிற்கு நேர் உச்சியில் இருந்தால் மட்டுமே காணமுடியும். ஆகவே ஆகாய விமானங்கள் இந்த விஷயமாக மிகவும் உபயோகமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. அவ்விமானங்கள் பறந்து செல்லும்பொழுது அடிக்கடி முழ்குதோணிகளைக் கண்ணுற்று, தம் கப்பல்களுக்கு சமாசாரத்தைத் தெரியப்படுத்துவதினால் அபாயத்தில் இருந்து தப்பித்துக்கொண்ட நம்மவர்களின் கப்பல்கள் மிகப்பல.

ஆகாய விமானங்கள் செய்கின்ற இரண்டாவது தொழில், பீரங்கிகளுக்கு குறிப்பறிவித்தல். பீரங்கிகள் மட்டமாகப்பிடித்து சுடப்படுகின்றவையல்ல: அவைகளைச் சாய்வாக வைத்துக்கொண்டுதான் சுடுவார்கள். குண்டானது வளைந்த பாதையாகச் (Parabola) சென்று குறித்த இடத்தைத் தாக்கும். அப்படித்தாக்குகிறதா இல்லையா என்று சுடப்பட்டவர்களுக்கு நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாது பீரங்கியின் சாய்வு சரியாய் இருக்கிறதா, குறித்த பொருள்மேல் படுகின்றதா என்ற விஷயம் தெரிந்துகொள்வது பீரங்கியின் உபயோகத்துக்கு இன்றியமையாதது. இதையறிந்து சொல்வதற்கு ஆகாய விமானங்கள் உபயோகப்படுகின்றன: அவ்விமானங்களினும் புகைக்கூண்டு மாதிரியானவை (balloon type) மிகவும் நன்கமைந்தன.

இந்த வகைக்கு உபயோகப் படுத்தப்படுகின்ற புகைக்கூண்டுகள் Captive balloons என்றழைக்கப்படுகின்றன. மிகப்பலமான கயிற்றினால் இப்புகைக்கூண்டுகள் கட்டப்பட்டிருக்கும். அக்கயிற்றை பீரங்கிகளுக்கு சமீபத்தில் தறி அடித்து அதில் கட்டிவைத்திருப்பார்கள். புகைக்கூண்டு அவ்விடத்திலே நின்றுகொண்டிருக்கும். அதன்மீது இருக்கும் மனிதன், குண்டுகள் குறித்த இடத்தை தாக்குகின்றனவா என்றும் இல்லாவிட்டால் எந்தத் திசைக்கு எவ்வளவு திருப்பவேண்டும் என்றும் Telephone வாயிலாக சொல்லிக்கொண்டே இருப்பான்.

இப்படியான கைதிப்புகைக்கூண்டுகள் (Captive baloons) கயிற்றினால் கட்டப் பட்டிருக்கிறதினால் நின்ற நிலையிலே சுழன்று கொண்டிருக்கின்றன. இது நுண்ணிய பார்வைக்குத் தடையாக இருந்ததினால், அக்குறையில்லாத விதமாய்ப் புகைக்கூண்டினை வித்தியாசப்படுத்தியிருக்கிறார்கள். முற்றிலும் உருண்டையாக இராமல் ஒரு நுனி பருத்து அகன்றும் மற்றது சிறுத்தும் இருக்கின்ற (Sausage Baloons) என்ற புகைக்கூண்டுகள் இவ்விதமாகச் சுழல்கிறதில்லை. இவைகள் தாம் இப்பொழுது உபயோகப்படுத்தப் படுகின்றன.

பீரங்கிகளுக்குக் குறிப்புத்தெரிவிக்க புகைக்கூண்டுகளே நன்கமைந்தனவேனும் சிறு சிறு தூரத்துக்குள் இருக்கும் அனேக பீரங்கிகளை ஒரு மனிதனே குறிப்பறிவிக்க வேண்டிவரின் எயிரோப்லேன் மிக நன்றாய் உபயோகப்படுகின்றது.

இதுகாறும் நாம் அறிந்து கொண்ட மட்டிலும், ஆகாய விமானங்கள் போர்வீரர் போக வர வாகனங்களாயமைந்ததே ஒழிய சண்டை செய்கின்ற ஆயுதம் என இன்னும் கருதப்படவில்லை. ஆனால் பிற்காலங்களில் ஒரு வேளை யுத்த ஆயுதமாக முடியினும் முடியலாம் என்று எதிர்பார்ப்பதற்குத் தடையிருப்பதாகத் தெரியவில்லை.

ஆகாய விமானங்களுக்கு நேரிடக்கூடிய அபாயங்கள் மிகப்பல.

பெரியபட்டணங்கள் ஒவ்வொன்றும் இந்த யுத்த காலத்திலே மிகக் கவனமாய்க் காக்கப்பட்டுள்ளன. ஆகாய விமானங்கள் வெகுதூரத்தில் வரும்பொழுதும், நம காதுக்கு எட்டாத சிற்றிரைச்சலை ஏற்று அறிவிக்கவல்ல இயந்திரங்கள் (Listening Posts) முக்கிய பட்டணங்களின் பலபக்கங்களிலும் இருக்கின்றன. இரைசசல் கேட்டவுடனே அவ்விஷயம் தந்தி மார்க்கமாகப்பட்டணம்முழுதும் பரவுகிறது. உடனே பெரிய சோதனை விளக்குகள் Search Lights ஆகாயத்தின் எல்லாத் திசைகளிலும் தம் வெளிச்சத்தைப் பரப்புகின்றன. ஆகாயப்பிரங்கிகள் (Anti-air-craft guns) ஒவ்வொன்றும் எந்தக்ஷணத்திலும் வெடிக்குண்டுகளைக்கிளப்பத் தயாராய் இருக்கின்றன. இவ்வளவு சங்கதியும் விமானத்தில் இருக்கும் மனிதர்களுக்குச் சற்றேனும தெரியாமலே நடக்கிறது. அபாயத்தைச் சற்றும் தெரிந்துகொள்ளாமலே விமானம் பட்டணத்துக்குள் வரவும், நாற்புறமும் இருந்து பீரங்கிகள் குண்டுகளைப் பிரயோகித்து ஒரு நொடிக்குள் அதனைத் தரைக்குக் கொண்டுவந்து விடுகின்றன.

ஆகாய விமானங்களுக்குப் பருவபேதங்களினுலும் கஷ்டங்கள் நேரிடுகின்றன. திடீரென்று புயற்காற்று எழும்பினுல் பிழைத்துத் திரும்புதல் அசாத்தியம். பின்னும ,தாம் எதிரி விமானங்களின்மேல் போடுகின்ற வெடிக்குண்டுகள் தம் விமானத்துக்குச் சமீபம் வெடிக்க நேரிட்டால், அப்பொழுதுண்டாகும் ஆகாயத்தின் கலக்கத்தினுல் தம் விமானம் தலைகீழாகத் திரும்ப நேரிடுகின்றது. இப்படியான அபாயங்களிலிருந்து தப்புதல் மிக அருமையான காரியம்.

“செப்பலின்” “எயிரோப்லேன்” ஆகிய இவைகளுக்கு அமைந்திருக்கும் ஏற்றத்தாழ்ச்சி என்ன?

செப்பலின போன்ற ஆகாயக் கப்பல்கள் மெதுவாய்த்தான் போகக்கூடியவை. இவற்றின் மிகுந்த வேகம் மணி நேரத்திற்கு 55 அல்லது 60 மைல்; எயிரோப்லேன்கள் மணிக்கு 100 மைலுக்கு மிகுதியாக செல்லக்கூடியவை.

எழும்பக் கூடிய உயரம எயிரோப்லேன்களுக்கு செப்பலின்களைவிடப்பன்மடங்கு அதிகம். செப்பலின்களால் அடையப்பட்ட மிகுந்த உயரம் 12,200 அடி; எயிரோப்லேன் அடைந்தது 26000 அடி உயரம்.

செப்பலின் வந்து இறங்குவதற்கு, பெரிய விசாலமான வெளியிடம் இன்றியமையாதது. தங்கும அறைகளில் இருந்து அவற்றை வெளியே கொண்டு வரும்பொழுதும, உள்ளே, கொண்டுபோகும்பொழுதும் செப்பலின்களுக்கு எளிதில் தீங்குநேரிட இடமுண்டு. எயிரோப்லேன்களுக்கு அத்தகைய தீங்குகள் நேரிடமாட்டா.

செப்பலின் செய்வதற்கு ஏராளமான பணம் செலவாகிறது. ஒரு செப்பலின் செய்யப்போதுமான பணத்தினுல் 50 எயிரோப்லேன் செய்துகொள்ளலாம். மேலும செப்பலின் செய்து முடிக்க எயிரோப்லேன்களைவிட மிகுதியான காலம் தேவையாயிருக்கிறது.

மழை புயற்காற்று முதலியவற்றின் கொடுமையைத் தடுக்கும வல்லமை செப்பலின்களுக்கில்லை.

செப்பலினை ஓட்டுவதற்கு நன்ருய்ப் பழக்கமுள்ள மனிதர்கள் 30 பேர் வேண்டும். எயிரோப்லேன் காணுது போகவோ, அல்லது எதிரிகையில் அகப்பட்டுக்கொள்ளவோ நேரிட்டால் ஒரு மனிதனே நஷ்டம்; செப்பலின்களுக்கு அவ்விதஅபாயம் நேரிட்டால் கப்பல் ஒன்றுக்கு 30 மனிதர்கள் நஷ்டம்.

இங்குக் கூறிய விஷயங்களில் செப்பலின்கள் எயிரோப்லேன்களைவிட மேன்மை குறைந்தன; ஆயினும் இரண்டு விஷயங்களில் எயிரோப்லேன் செப்பலின்களுக்கு ஈடாகாது. , எயிரோப்லேன் தாங்கக்கூடிய சுமை மிகச் சிறிது. செப்பலின்கள் அதைவிட எத்தனையோமடங்கு மிகுதியான சுமையைக் கொண்டு செல்லும் வல்லமை யுடையன. இரண்டாவதாக, எயிரோப்லேன் ஓட்டுகின்ற மாலுமி 4 அல்லது 5 மணிநேரத்துக்கதிகம் ஆகாயத்திலேயே இருத்தல் அரிது. செப்பலின் மாலுமிகளுக்கோ எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் இருக்கமுடியும.

யுத்தத்திலே உபயோகப்படுகிற ஆயுதங்களும் மற்றவைகளும் யுத்தமொழிந்த சமாதானகாலத்தில முற்றிலும உபயோகம் இல்லாதனவாய் முடிகின்றன. தற்காலம் நடைபெறும் ஐரோப்பிய யுத்தத்திலே உபயோகப்படுகிற “ஜாக் ஜான்ஸன்” என்ற பட்டப்பெயர் பெற்ற குண்டுகள்; 16 அங்குலம் வாயகலமும் 20 அல்லது 25 மைல் தூரத்துக்கு வெடிக் குண்டுகளை எறியும் வல்லமையும் பொருந்திய Howitzer என்னும் மிகப் பெரிய பீரங்கிகள்; வி.ஷ

நேரத்துக்கு நூறு இருநூறு குண்டுகளைச் சாமாரியாகக் கிளப்பக்கூடிய "மெஷின் கன்" என்ற பீரங்கிகள்; ஒரு சைனியம் முழுமையும் விஷக்காற்றினால் ஒரு நொடிக்குள் மூழ்கியிறக்கச் செய்கிற "பாம்" என்னும் குண்டுகள்; யாவருக்கும் தெரியாதவிதமாய் திடீரென்று கப்பல்களை மூழ்கச்செய்யவல்ல Submarines என்னும் முழுகு தோணிகள்; இன்னும் மிக வல்லமை பொருந்திய பீரங்கிகளைத் தம்முட்புறத்துக் கொண்டதும், எஃகினால் செய்யப்பட்ட கவசமணிந்திருப்பதால் எதிரியின் குண்டுகளுக்குச் சற்றேனும் அஞ்சல் வேண்டாததும், நெகிழ்ச்சி பொருந்திய வண்டிச்சக்கரங்களை யுடையதால் கல் மண் மணல் சேற்று நிலம் முதலிய எதிலும் சற்றும் தடைபடாமல் ஊர்ந்து சென்று எதிரியின் சேனையை அடியோடு தொலைக்கும் வலிமையும் (Tanks) டாங்க்ஸ் என்னும் பெயரையுமுடைய மிக நவீனமான இயந்திரங்கள், ஆகிய இவைகளும் இவைபோன்ற பிறவும் யுத்தம் நின்று சமாதானம் வரும்பொழுது எவ்விதத்திலும் உபயோகமில்லாது போகின்றன.

ஆனால், ஆகாயவிமானங்கள் சண்டையிற் போலவே சமாதான காலத்திலும் உபயோகப்படக்கூடியதாக இருக்கின்றன. தேசயாத்திரை செய்ய இவற்றைவிட சௌகரியம் பொருந்திய வாகனம் அமைதல் அரிது. எவ்வளவு நன்றாய்ச் செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளும் மற்று வாகனங்களும் இவைக்கு ஈடாகா. யாதொரு சத்தமோ அசைவோ ஏற்படாமல் தேகசுகத்துக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும். ஆகாயத்தில் பறந்து செல்லும் பொழுது தேகம் மனம் இவைகளுக்கு இதுகாறும் தெரியாத சுகமும் உற்சாகமும் தரக்கூடியவை. பின்னும் மேடு, பள்ளம், கடல், மலை, காடு, வனாந்தரம் என்ற எவ்விதமான தடைகளுக்கும் அஞ்சவேண்டியதாக இராது.

ஆகவே, ஆகாய மார்க்கமாகத் தேசயாத்திரை செய்வது கைகூடக்கூடிய காரியம். இப்பொழுது இரயில் கம்பனி, புகைக்கப்பல் கம்பனி, மோட்டார் கம்பனி முதலியவைகள் இருப்பதுபோல ஆகாயவிமானக் கம்பனிகள் ஏற்படுவதும் சாத்திய விஷயமே. இந்தியாவில் இருந்து ஐரோப்பாவுக்கோ, ஆபிரிக்காவுக்கு, அல்லது இதர கண்டங்களுக்கோ ஆகாயவிமானக் கம்பனிகளின் உதவியால் நாம் போகக்கூடியதாகவும் நேரும்.

பின்னும், கப்பல் இரயில் முதலியவைகளில் இப்பொழுது வருகின்ற தபால் கட்டுகள் ஆகாயமார்க்கமாய் வரவுங்கூடும்.

மோட்டாரைவிட மிக வேகமாக இருப்பதினாலும், மோட்டாருக்கு ஏற்படும் பலவிதமான செலவுகள் இதற்கு அவசியமில்லையாதலாலும், ஆகாயவிமானங்கள் வர்த்தகர்களுக்கு ஏற்ற வாகனங்களுமாம்.

இன்னும் குதிரைப்பந்தயம், மோட்டார்ப் பந்தயம் என்ற பலவகைப் பந்தயங்கள் நடைபெறுவது போல ஆகாயவிமானப் பந்தயங்களும் மிகச் சாதாரணமாக உண்டாக இடமுண்டு.

இப்படி ஆகாய சஞ்சாரம் சாதாரணமாக ஏற்பட்டால், ஆகாயச் சட்டங்களும் ஆகாயப் போலீசார்களும் இன்றியமையாதன ஆகும்.

சமாதான காலங்களில் அப்படியாக, இனிமேல் ஆகாயவிமானங்கள் நன்றாய் விருத்தி பண்ணப்பட்ட பிறகு யுத்தமானது எப்படியிருக்கும் என்பது ஊகித்தற்கும் முடியாத காரியம். யுத்த எல்லை (War zone) இது என்று வரையறுத்துக் கூறமுடியாதபடி பட்டணங்கள் கிராமங்கள் ஒவ்வொன்றும் எதிரிகளின் குண்டுகளுக்கு எப்பொழுதும் அஞ்சியே இருக்க வேண்டியதாக இருக்கும். இன்ன இடத்தில் என்ற பாடில்லாமல் எவ்விடத்தும் யுத்தம் நடக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே யுத்தம் இதுகாறும் இருந்ததைவிடப் பன்மடங்கு கொடியதாகவும் பயங்கரமானதாகவும் முடியும். அப்படி முடிவதினால் யுத்தம் செய்வதற்கே உடம்படாது ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்கள் தர்க்கங்களைத் தண்டமொழித்த மற்றுபாயங்களால் முடித்துக்கொள்ளத் தலைப்படுவார்கள். அப்படிச் சண்டையே இல்லாது உலகம் முற்றும் சமாதானத்தோடு இருக்கத் தலைப்படுமானால் அதைவிடப் பெரிய நன்மையும் விரும்புதற்குண்டோ?

T. V. Nilakanta Pillai, B. A.

Palamcottah.

தற்கால யுத்தப் படிப்பினைகள்.

ஸ்ரீமாந் M. R. ஸ்ரீநிவாஸய்யரவர்கள்.

---

1. இப்பொழுது நடந்துவருகின்ற கோரமான யுத்தத்தினால் உலகத்தாருக்குப் பல நூதனக் கருத்துக்கள் வெளியாகின்றன. அவைகளில் எனக்குத் தோன்றிய சிலவற்றை இங்கே எழுதுகிறேன்.

2. நமது இராஜாங்கத்தில் ஏற்கனவே சம்பளம் பெற்று நிலையாய் அமர்ந்துள்ள இராணுவ வீரர்கள் யுத்தத்துக்குப் போதாமலிருக்கிறார்கள். அதை உத்தேசித்து இங்கிலாந்திலும் இந்தியாவிலுமுள்ள வயது நிபந்தனைக்குட்பட்ட ஆங்கிலேயர்களும் இராணுவவீரர்களாகச் சேரவேண்டுமென்றும அதற்காக முன் பயிற்சி செய்து கொள்ள வேண்டு மென்றும நமது இராஜாங்கத்தார் உத்திரவு செய்திருக்கிறார்கள். அதேபிரகாரம் இந்தியர்களும் அவர்கள் இஷ்டப்படும பக்ஷத்தில இந்தியாவின் பாதுகாப்பு சைனியங்களில் சேரலாமென்றும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இவ்வேற்பாட்டிற்காக நாம் ஆங்கில துரைத்தனத்தாருக்கு மிக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

3. இதுவிஷயமாகப் பூர்வீக நாகரீகம் நிறைந்த நமது இந்துதேசத்தின் சரித்திரத்தைச் சற்றுக் கவனிப்போம். ஆதியில் ஆரியர்கள் சிந்துநதிப்பிரதேசத்தில் குடியேறி அங்குள்ள மிலேச்சர்களுடன் யுத்தம் செய்து அவர்களை ஜயித்து பெரும்பான்மையோரை மலைப் பிரதேசங்களுக்கும் தக்ஷண தேசங்களுக்கும் துரத்திவிட்டாகள். அச்சமயத்தில் ஆரியர்கள் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, என்ற நான்கு வருணங்களாகப் பிரியாமல் எல்லோரும் ஒரே வகுப்பினராயிருந்து, பயிர்கள் செழிக்கும்பொருட்டு மழையையும், சத்துருக்களை வெல்லும் பொருட்டு ஜயத்தையும் கோரினவர்களாய் இந்திரன் முதலிய தேவர்களை ஆராதித்துவந்ததாக ருக்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப் பக்தியாக மனதை ஒரே வழியில் செலுத்தி ஆராதிக்கவும், சத்துருக்களுடன் யுத்தம் செய்யவும் ஆக இரண்டுகாரியத்தையும் ஒரே காலத்தில் ஒரே மனிதர்கள் செய்ய சாத்தியப்படாததினால் தங்களில் சாந்தமுடையவர்களாயும் மனவொழிவுடையவர்களாயும் சாத்வீககுணம் மேலிட்டவர்களாயும் உள்ளவர்களை ஷை தெய்வ ஸ்தோத்திர வேலைக்காகவும் தேகபலமும் தைர்யமும் கோபமும் ரோஷமும் உள்ளவர்களை ஷை யுத்தம் செய்யும் வேலைக்காகவும் வியாபாரம், பயிர்த்தொழில் வேலைகளைக் குறைவறச் செய்துவருவதற்காக வைசியர்களையும் ஷை 3 ஜாதியார்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்துவருவதற்காக சூத்திரர்களையும் தங்களுக்குள் யோக்யதைக்கும் குணத்துக்கும் தக்கபடி முறையே பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று நான்கு வருணங்களாகப் பிரித்து வெகுகாலமாக வம்சபரம்பரையாய் நடந்துவந்திருக்கிறார்களென்றும் வெளியாகிறது. அதினால் க்ஷத்திரிய வருணத்தார்கள் சத்துருக்களுடன் யுத்தம் செய்வதையே தங்களுடைய ஜாதித் தருமமாக அனுசரித்து, பால்யத்தில் ஆயுதாப்பியாசங்களை ஆசாரியர் முகமாக நன்றாய்க் கற்று அதில் தேர்ந்தவர்களாகி யுத்தத்திலே பிரியம் வைத்த மனதை உடையவர்களாய் வம்ச பரம்பரையாக அனுஷ்டித்து வந்தார்கள். ஜெயித்தவன் இவ்வுலகத்தில் இராஜலக்ஷ்மி முதலிய சகல போகபாக்கியங்களையும் அடைகிறான். முன் வைத்தகாலைப் பின் வைக்காமல் யுத்தத்தில் இறப்பவன் வீரசொர்க்கத்தை அடைந்து அங்கே சகல சுகங்களையும் அனுபவிக்கிறான். ஆதலால் கீர்த்தியும் சுகபோகங்களும் ஜெயித்தாலும் உண்டு இறந்தாலும் உண்டு என்று கூறப்படுகிற நமது சாஸ்திரத்தை நம்பி நடந்தார்கள். ஆதலால் எந்த சமயத்தில் யுத்தம் நேருமோ அப்பொழுது புதுப் பயிற்சி என்பது தேவை இல்லாமல் தீடீரென்று யுத்தத்திற்குப் புறப்படுவார்கள். அது அவர்களுக்கு இயற்கையாக ஏற்பட்ட ஜாதித்தொழில். இம்மாதிரி தொன்றுதொட்டு வம்ச பாரம்பரையாக அவர்களுடைய தேகங்களையும் மனதையும் பழக்கி அப்பியசித்து வந்ததினாலும் தகப்பனுடைய தைரியம், பலம், ரோஷம் இவைகளைப் பொதுவாக மகன் அடைந்து விருத்திசெய்வது சௌகரியமாகையாலும் யுத்தத்திற்கென்றே ஒரு பிரத்தியேக ஜாதி ஏற்பட்டுவந்தது. இத்துடன் இராஜனுக்கு வைசிய, சூத்திர ஜாதிகளில் பிறந்த சூதர்கள் முதலிய கலப்பு ஜாதியார்களும் ஷை யுத்தத்தொழிலை வம்ச பரம்பரையாக அனுஷ்டித்து வந்தார்கள். *பாரதயுத்தம் ஆரம்பித்த காலத்தில் அதிரதர், மகாரதர், அர்த்தரதர் என்ற யுத்தவீரர்களும், ரதகஜதுரகபதாதி ஆகிய நால்வகைச் சேனைகளும் யுத்தத்திற்காகப் புதுப் பயிற்சி என்கிற எவ்வித முயற்சியுமில்லாமல் முன்னமேயே வில்வித்தை ஆயுதப் பயிற்சிமுதலியவைகளைக் கற்றுத்தயாராயிருந்தார்கள்.

கையில் வில் ஆயுதம் பிடித்தவர் எவர்களோ அவர்களெல்லோரும் யுத்தத்துக்குத் தயாராய் வந்து சேரவேண்டுமென்று அரசன் தன் சேவகர்கள் மூலமாக பறை சாற்றுவிப்பான். யுத்தத்தில் பயிற்சியும் பிரியமும் நிறைந்துள்ள போர்வீரர்களும் போர்ச் சேவகர்களும் தங்களுடைய உயிரை ஒருபொருட்டாக எண்ணாமல் யுத்தமுனைக்குத் தயாராய் வந்துவிடுவார்கள். நலவு சொல்லவாவது கட்டாயப்படுத்தவாவது வேண்டியதில்லை. யுத்தத்துக்குப் பயந்தவன் என்ற இழிவான சொல்லைக் கேட்கக் கொஞ்சமேனும் மனம் பொறார்கள். இந்த ஸ்திதியில் துரியோதனாதியர்களுக்குப் பதினொரு அக்குரோணிச் சேனைகளும் பாண்டவர்களுக்கு 7 அக்குரோணிச் சேனைகளும் ஆக 18 அக்குரோணிச் சேனைகள் குறித்தமாத்திரத்தில் சேர்க்கப்பட்டு 18 நாள் பாரதயுத்தம் நடந்தது. நேர்க்குநேர் யுத்தம்; முன் வைத்த காலைப் பின் வைக்கிறதில்லை, ஓடுகிறவனை யுத்தவீரனாயிருப்பவன் துரத்திக்கொல்வதுமில்லை. குழிகளில் மறைந்து அஜாக்கிரதையாயிருக்கிறது என்று பார்த்து வதைக்கிறதும் சமயம் வந்தால் வெகுதூரம் பின்னடைந்து ஓடுகிறதும் யுத்தஸ்தலங்களைப் பலபலவிடங்களுக்குமாற்றி எதிரிகளை வகைமோசமாகப் பலஹீனப்படுத்தி ஜெயிக்கமுயலுவதும் இக்காலத்திய யுத்ததருமமாக இருக்கின்றன. தருமம் நிறைந்த முந்தினகாலங்களில் இம்மாதிரி யுத்தம் செய்வது அகௌரவமாக மதிக்கப்பட்டுவந்தது. ஆனால் இராமாயணத்தில் இராவணன் குமாரன் இந்திரஜித்து செய்ததாகச் சொல்லப்படுகிற மோசமான மாயயுத்தத்தை இதற்கு ஒருவாறு உவமையாகச் சொல்லலாம். இந்த ஸ்திதியில் இம்மாதிரி யுத்தம் ஏறக்குறைய மூன்று வருஷமாகியும் முடிவுக்கு வராமலிருப்பது ஆச்சரியமல்ல. பகவான் கிருபைகூர்ந்து ராஜாங்கத்தாருள் சமாதானம் ஏற்பட்டு யுத்தம் வெகு விரைவில் முடிவுக்குவரும்படி நாமெல்லோரும் பிரார்த்திப்போமாக!

4. ஆனால் ஷை பாரதயுத்தமோ குருக்ஷேத்திரமென்ற ஒரே இடத்தில் நடந்தது. ஷை யுத்தத்தில் இந்தியாவிலும் பிறதேசங்களிலுமுள்ள அரசர்களும் சேனைகளும் சம்மந்தப்பட்டிருந்த போதிலும் இப்பொழுதுபோல் பலபல இடங்களில் சிதறி யுத்தங்கள் நடக்காமலும் குருக்ஷேத்திரமென்ற ஒரே இடத்தில் எல்லோரும் ஒருங்குகூடி ஜெயிப்பது அல்லது இறப்பது என்ற ஒரே திடமான மனது உடையவர்களாய் பாரதவீரர்கள் யுத்தம் செய்தார்கள். அநேகமாய் இரவில் யுத்தம் கிடையாது. யுத்தத்தில் வீரர்கள் மடியமடிய அப்போதைக்கப்போது புதுவீரர்களைச் சேர்த்துக்கொண்டு செய்துவருகிற தற்கால யுத்தமுறைமைகளை மகா பராக்கிரமசாலிகளான அக்காலத்து வீரர்கள் அனுசரித்து யுத்தம் செய்வதாயிருந்தால் இப்பொழுதைவிட உலகமானது அளவிடமுடியாத நீடித்த கஷ்டங்களையும் துன்பங்களையும் அநுபவிக்கும்படி நேரிட்டிருக்கும். உலகமே அழிந்து பாழாயிருக்கும். ஆனால் அக்காலத்திலோ அந்த யுத்தத்தில் சம்மந்தப்படாத மற்றுக் குடிகளுக்கும் அதாவது—பிரம, வைசிய, சூத்திரர்களுக்கு—எவ்வித இடைஞ்சல்களும் உயிர்ப்பயமும் கிடையா. அவர்களுடைய வர்ணாச்சிரமத்தொழில்களை அவர்கள் கிரமமாக யுத்தகாலத்திலும் செய்து வந்தார்கள். நாடு நகரங்களுக்காவது போக்கு வரத்து வியாபாரத்துக்காவது தோட்டம், நன்செய், புன்செய் நிலங்களுக்காவது எவ்வித சேதமும் கிடையாது.

5. இப்பொழுதோ இதர தொழில்களில் பயிற்சியும் ஆசையும் வைத்து அவைகளில் புத்தியைச்செலுத்திவருபவர்களைப் புதிதாகப் போருக்குப்போகச் சொன்னால் தம் தொழிலைத் திடீரென்று மாற்றுவது அவர்களுக்குக் கடினமாகவிருக்கிறது. பழைய தொழில்களுக்குப் பங்கங்களும் நஷ்டங்களும் ஏற்படுகின்றன. புதுப்பயிற்சிக்காக இராஜாங்கத்தாருக்கு ஒரே காலத்தில் நேரிடும் பொருட் செலவுக்கோ அளவில்லை. ஷை விஷயங்களை எடுத்துச் சொல்வதினால் யுத்தத்தில் சேர எவ்வித அசௌகரியத்தையும் காரணமாகச் சொல்லி நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களின் பிரஜைகள் எவருக்காவது தம்மை விலக்கிக் கொள்ள முயற்சிசெய்ய நியாயமாயிருக்கிறது என்பது என்னுடைய கருத்தல்ல. யுத்தவிஷயமாக நமது தேசத்தில் ஆதியில நடந்தேறிவந்த மேன்மையை எடுத்துச் சொல்லவேண்டுமென்பதே. ஆகலால் இக்காலத்தில் தேசாபிமானமும் இராஜவிஸ்வாசமுமுள்ள எல்லா ஜனங்களும் எவ்வித இடையூறுகளையும் ஒருபொருட்டாய் எண்ணாமல் இந்த யுத்தகாலத்தில் யுத்தத்திற்குப் பயிற்சி பெற்று போர்புரிவது அவர்களுடைய பெருத்த கடமையாயிருக்கிறது.

6. உலகத்தில் யுத்தப் பயிற்சியில் மேன்மை பெற்று இதரதேசங்களை ஜெயித்து கீர்த்திபெற்ற கிரீஸ், ரோம் முதலிய தேசங்களின் பூர்வீகசரித்திரங்

களைப் பார்த்தால் ஷை சங்கதிகளின் உண்மை நன்ருகத் தெரியவரும். தங்கள் போர்செய்யும் வலிமையினுல் இராஜலட்சுமியையும் விசேஷ செல்வத்தையும் அடைந்த ஜாதியார்கள் ஷை போகங்களை அனுபவிப்பதில் மட்டும் மனதைச் செலுத்தினவர்களாய் யுத்தப் பயிற்சியை மறந்து நாளடைவில் க்ஷீணித்துப் போகிருர்கள். சண்டை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, போர்த் தொழிலுக்கென்றே எக்காலத்திலும் வம்ச பரம்பரையாய் யுத்தப்பயிற்சி செய்துவந்த தனித்த ஜாதியார்கள் இல்லாமல் போனதுதான் தற்காலநிலைமைக்குக் காரணம். தேசத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் மூன்றுவருஷம் யுத்தப்பயிற்சி செய்து இராணுவத் தொழிலை அனுஷ்டிக்கவேண்டுமென்று ஜெர்மனிதேசத்தில் விதி ஏற்பட்டிருக்கிறது. அதிலும் சில குறைகள் இருக்கின்றன. தியானம் செய்துவருகிற ஒரு ஞானியும் சங்கீதத்தில் வல்ல வித்வானும் படமெழுதும் சித்திர வேலைக்காரனும் பாட்டுகள் கவனம் செய்யும் கவிஞனும் திடீரென்று யுத்தத்துக்குப் போவதென்ருல் அவர்களுக்கு ஏற்கனவே யுத்தப்பயிற்சி யிருந்தாலும் உருண்டை மனிதனைச் சதுரமான வளையில் வைப்பது என்ற பழமொழிக்கு ஒத்ததாயிருக்கிறது.

7. இவ்வாறு க்ஷத்திரிய வம்சம் என்ற ஒரு ஜாதியானது பல காரணங்களினுல் இந்தியாவில் நசித்துப்போகவே இந்தத் தேசமானது வெகுகாலமாக அடைந்து வந்திருந்த நாகரீகத்தையும் மேன்மையையும் பயிற்சியையும் இழந்து போகும்படி யேற்பட்டது. இப்படி எல்லாம இருக்க நமது தேசத்தின் பழய சாஸ்திரங்களையும் அனுபோகங்களையும் ஆராயாமல் ஒரே தரப்பாக மேல் நாட்டுக் கல்விகளை மட்டும் பயின்ற தற்காலத்திய இந்தியர்களில் அநேகர் ஜாதிபேதத்தினுல்தான் நமது தேசம் முன்னுக்குவரவில்லை. பிராமணனும் பறையனும் ஒருங்கு உண்டால் அந்த க்ஷணமே நமது தேசம் சீர்திருத்தத்துக்கு வந்துவிடுமென்று காரணம் சொல்லுகிருர்கள். இது பண்டம் ஒரு பக்கம், பழி ஒரு பக்கம் என்பதுபோல இருக்கிறது.

8. ஆதலால் இப்போது அனுபோகம் மூலமாகத்தெரிகிற சங்கதிகளெல்லாம் புராதனமாயும் நீடித்த காலமாயும இகம, பரம், ஆகிய இரண்டு சாதனங்களிலும் முதன்மையாக நாகரீகமடைந்த நமது முன்னேர்கள் முன்னமேயே புத்தியினுலும் அநுபவங்களினுலும் அறிந்த உத்தமமான வழிகளைக் கைக்கொண்டு அனுஷ்டித்து வந்திருக்கிருர்கள் என்று நன்ருய் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத் தெளிவாய்த் தெரியவரும்.

9. ஷை சங்கதிகளினுல் நமக்குத் தெரியவரும் கருத்துக்கள் என்னவென்ருல் ஒரு குறித்த காலத்தில் ஒரு தேசத்தார் ஒரு விஷயம் மிகவும் அவசியமென்று நினைக்கிருர்கள். உடனே எல்லா ஜனங்களும் அதையே அனுஷடிக்க ஒருங்கே பிரயத்தினப்படுகிருர்கள். ஏனென்ருல் தகப்பன் தொழிலை மகன் அனுசரிக்க வேண்டுமென்று நிபந்தனையிலலை. அது அக்காலத்து நாகரீகமாக ஏற்பட்டுவிடுகிறது. அப்பொழுது மற்றத் தொழில்களும் கடமைகளும் நிராகரிக்கப்படுகின்றன. அதனுல் வேறு இடைஞ்சல்கள் நேரிடுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு விஷயத்திற்கு பிரதான்னியம் கொடுத்து மற்ற விஷயங்களை அலக்ஷியம் செய்வது வழக்கமாக ஏற்பட்டுவிடுகிறது. எல்லாவிதத் தருமங்களும் தொழில்களும் கடமைகளும் ஏககாலத்தில் அதன் அதனுடைய அளவுக்கும் நிலைமைக்கும் தக்கவாறு எப்பொழுதும் குறைவுபடாமல் நடந்தேறி வரவேண்டும். அவ்வாறில்லாமல் படகிலுள்ள எல்லோரும் அதன் ஒரு பக்கமூலையை சிலாக்கியமென்று மதித்து அங்கேயேபோய் நின்ருல் படகு ஜலத்தில் மூழ்கிப் போகுமல்லவா? ஒரு விஷயம் தற்காலத்துக்கு மட்டும் அவசியமில்லை என்பதை நினைக்கக்கூடாது. ஷை விஷயங்களை நமது முன்னேர்கள் தெளிவாய் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆதலால் ஆத்மவித்தை, தெய்வ பக்தி, யுத்தப்பயிற்சி, இராஜரீகம், செல்வ அபிவிர்த்திக்கு யோக்கியமான வியாபாரம், கைத்தொழில் விவசாயம் இன்னும் மற்ற எல்லாத் தொழில்களிலும் ஒரு காலத்தில் ஏற்றம், ஒரு காலத்தில் தாழ்ச்சி என்பது இல்லாமல எக்காலத்திலும் சமமாக க்ஷேமமடைந்து விருத்தியாகும் பொருட்டு வம்ச பரம்பரையாக நமது முன்னேர்கள் வாணுசிரம தருமங்களை அனுஷ்டித்து நீடித்த இக, பர, மேன்மைகளையும் அதன் பயனைச் சந்தோஷமான வாழ்வுகளையும் நாகரீகங்களையும் அனுபவித்து வந்தார்கள்.

M. R. ஸ்ரீநிவாஸய்யர்,
பெரியகுளம்.

நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம்.

30-வது பக்கத்தொடர்ச்சி.

கருடாஸ்திரப் படலம்.

என்று மருமகன் இயம்பின மொழிகளை
மாமன் கேட்டு மனமிக நொந்து
"நல்லதப்பா! நாகாஸ் திரங்கள்
இத்தனை தானோ? இனிவேறுண்டோ?
உன்னைச் சொல்ல ஒருகுறை யில்லை
கலியன் முற்றின காலமிதல்லவோ?
(என்) மாமனர் இறந்து வருஷம் எட்டாக
யான் படும் பாடெலாம் யாரே யறிபவர்!
நாலாண் டாக நல்ல விளைவில்லை,
செலவு கழிந்ததே தெய்வச் செயலாம்.
அடைமழை யாலே அழிந்த தோர் வருஷம்
வெயிலின் கொடுமையால் வெந்ததோர் வருஷம்.
போன ஆண்டில் பொலிவே இல்லை,
கொக்கு நோய் விழுந்து குடியைக் கெடுத்தது.
கார்விளைவில்லை, பிசானம் கரிந்தது;
விளைவில்லை யாயினும் வீட்டுச் செலவில்
ஒருகுறை யேனும் உண்டோ அப்பா?
பிள்ளைப் பேறும் பிறந்த நாளும்
இல்லா வருஷம் இல்லையே அப்பா!
குடும்பச் செலவுகள் கூறி முடியுமோ?
ஒன்றா? இரண்டா? ஒன்பதா?, பத்தா?
ஆண்டு தோறும் ஆலடி மாடன்
கொடைக்கு ரூபாய் கொஞ்சமா செல்லும்?
போன கொடைக்குப் புதிதாய் வந்த
வில்லுக்காரி வீரம் மைக்கு
நாலு சேலையும் ரூபாய் நாற்பதும்
கொடுத்தது நீயும் சூடி யல்லவா?
எனக்குச்
சல்லடம் கச்சை தைக்க மாத்திரம்
ஐம்பது ரூபாய் ஆச்சுதே அப்பா!
போக்கில் லாத பயல்களைப் போல
துணியை அரையில் சுற்றிக் கொண்டு
நானும் ஆடினல் நன்று யிருக்குமா?
காரணவன் என்றொரு கணிசம் வேண்டாமா?
பிலே!
சந்நிதி முன்னே தறித்த கடாவுக்
கிருபது ரூபாய் எண்ணி வைத்தேனே!
நீங்கள்
அப்பன் மக்கள் அனைவரும் இங்கே
இருந்து தின்றது போதா தென்று
கொடியிறைச்சிகளும் கொண்டு போனீரே?
இந்தச் செலவுகள் ஏற்படுவதனல்
மாடனை வணங்கா திருக்க லாமா?
கடன்பட் டாயினும் காலாகாலத்தில்
வேண்டும் காரியம் செய்யவேண்டாமா?
கொடை ஓராண்டு கொடுக்க முடங்கினுல்
குடும்ப தோஷமும் குறைவும் வாராதோ?
அடே!
ஆத்தாள் செத்த அடியந்திரச்செல
வாயிரம் பணமா? ஆறுயிரம் பணம்
என்று சொல்லவுன் வாய்க்கியலாதோ?
பந்தலில்லையா? பாடை யில்லையா?
பறைமே ளங்களும் பாட்டு மில்லையா?
நாலு தெருவும் நடை மாறவில்லையா?
காளமில்லையா? கருங்கொம்பில்லையா?
களியல் கூத்தசை கம்புகளில்லையா?
முரசு வாத்திய முழக்க மில்லையா?
என்ன இல்லை என்தாய்க் கப்பா?
தோசை ஆயிரம் சுட்டு மூலையில்
ஆசை தீரவைத் தழுத தில்லையா?
பத்துச் சாக்குப் பயறுமொன்றாய்
அடுத்த கிழமையில் அவிக்கவில்லையா?
தேங்காய்
இரண்டாயிரத்துக் கதிகமெடுத்து
வீடுவீடாய் விளம்ப வில்லையா?
பதினறன்று பார்ப்பார்க் கெல்லாம்
பட்டும் கொடையும் பாதரக்ஷையும்
கட்டிலும் மெத்தையும் கடுக்கன் மோதிரமும்
பாயஸபாத்திரம் பஞ்சபாத்திரமும்
அமுது படியும் அளிக்கவில்லையா?
மேலும்
பசுவும் கன்றும், பத்து மரக்கால்
நிலமும், தானம் நெறிதவறுமல்
செய்யவில்லையா? தினமும் வெற்றிலைச்
செலவும் உனக்குத் தெரியாதோடா?
படிப்புரை யருகில் வைத்த படிக்கம்
பத்திர காளி பலிப்பீடம்போல்
ஆனதை நீயும் அறியா யோடா?
பத்துப் பெண்கள் பட்டினி கிடந்து

பருத்திப் பொதிபோல் பதினாறும் நாள்
வெளியில் வந்திட வேண்டுமானால்
அவர்
எத்தனை தோசை யிட்டலிக் கெல்லாம்
ஏம காலரா யிருப்பார் அப்பா!
இட்ட செலவெலாம் எடுத்துச் சொன்னால்
எண்ணி முடியுமா? எழுதி முடியுமா?
சிதம்பரக் கட்டளை, செந்திற் கட்டளை,
மதுரைக் கட்டளை வகைக்கொரு பூவில்
எண்பது கோட்டை நெல்லில் உழக்குக்
குறைந்துதானால் கொடுக்க முடியுமா?
பேயுமஞ்சும் பெரும் ப்ழஞ்சி
அய்யனிடத்தில் ஆண்டுதோறும்
கொண்ட கடனைக் கொடுக்காவிட்டால்
அவர், வயிற்றை ஊத வைத்திடுவாரே!
குறளியை ஏவிக் கொன்றிடுவாரே!
நினைத்திராமல் நிதமும் எத்தனை
செலவுகள் வந்திடும்? தெரியுமோ உனக்கு?
*சானல் 'வாச்சர்' சந்தனத் தேவர்க்
'கட்ரஸ்' கொடுத்த வகைக்கோராறு
ரூபாய் இன்று ரொக்கம் கொடுத்தேன்.
இனி
இந்த மாதம் இருபதாம் தியதி
†'கார்டர்' அண்ணன் காடுமாறிப்
போகிறார். அவரைச் சும்மா போகச்
சொல்லலாமோ? சொல் நீ யப்பா?
இப்படி யிப்படி இன்னும் செலவுகள்
எத்தனையோ வரும் எண்ணிலடங்குமோ?
உழவன் மீதி உழவு கம்பென
உலகம் சொல்வது முண்மையல்லவோ?
பிலே! நீ
ஏழுவருஷமாய் இங்கிலீஷ் படித்தையே
ஏ, பி, ஸி, டி எழுதத் தெரியுமா?
எத்தனை பணத்தை வாரியெறிந்தேன்!
எல்லாம பாழுக்கிறைத்த நீர்போல்
ஆக்கிவிட்டாயே அவலக்ஷணமே!
அந்த,
சாஸ்தாங்கோவில் சாந்தி அய்யர்
மகனுக்கெத்தனை வயது காணும்?

* Channel Watcher of the Irrigation Department.

† Forest Guard.

அவன்,
படித்து பி. ஏ. 'பாஸாய்' நல்ல
பதவியிலிருப்பதைப் பார்க்கவில்லையா?
உண்மை! உண்மை! ஒரு தடையில்லை
பட்டினிகிடந்து படிப்பவர் மட்டுமே
பரீக்ஷைதேறுவர்! பட்டமும் பெறுவர்!
அன்றி,
ஆமைவடைக்காய் அரைஞாண் பணயம்
போளிக்காகப் புஸ்தகம் பணயம்
சீடைக்காக 'ஸ்லேற்று'ப் பணயம்
முறுக்குக்காக மோதிரம் பணயம்
காப்பிக்காகக் கடுக்கன் பணயம்
'க்ளாரு'க்காகக் காறை பணயம்
கூத்துக்காகக் கொடையும் பணயம்
இப்படியாக எல்லாம் பணயம்
வைத்துத் தின்னும் வயிற்றுக்கள்வர்
வாழ்ந்திடுவாரோ! வாழ்ந்திடுவாரோ!
முருக்குத் தடிபோல் வளர்ந்த முட்டாளே!
நீ, பணயம் வைத்த பண்டமனைத்தும்
எத்தனைதரம் நான் மீட்டியெடுத்துத்
தந்தேனப்பா! தந்தேனப்பா!!
அடே,
ஆறுவருஷமாய் 'ஐக்கோர்டு'வரையும்
வழக்குப்பேசி யென் மாமனுருக்குப்
பணம் கடன் கொடுத்த பயல்களை எல்லாம்
பஞ்சாய்ப் பறத்தின பாதர் சிங்கமாம்
என்னையும் குடும்ப தோஷி யென்று நீ
சொல்லவந்தாயே! சொல்லவந்தாயே!
விலைக்கு விற்ற விளையை மைனர்
வியாச்சியம் செய்து மீட்டினதுன்றன்
அப்பனா? நானா? யாரடா சொல்லு?
அன்பாய்ப் பேசுமுன் அப்பனானுனக்கு
அரைக்காசக்கோர் ஆதாயமுண்டோ?
மூத்த
காரணவர் பெற்ற *கன்றுகள் கூடி
ஆயிரம் ரூபாய்க் காவ லாதி
வைத்ததை நீயும் மறந்தாயோடா?
அந்த
உகந்துடமைப் பணம் ஒன்றுமவருக்
கில்லாதாக்க என்னபா டெல்லாம்
பட்டேனப்பா! பார்த்தது மில்லையோ?

* மக்களை நிந்தையாகக் கன்றுகள் எனக் கூறினர்.

பிலே !
குசும்பன் சாமியும் குண்டுணிச் சுப்புவும், உன்
அப்பனும் கூடி ஆலோசனைகள்
செய்ததெல்லாம் தெரியும் ! தெரியும் !
அறிந்த வித்தைக ளனைத்தையு மவரைக்
காட்டச்சொல்லோ ! காட்டச்சொல்லோ !
'கோர்ட்டில்' வியாச்சியம் கொடுக்கச் சொல்லோ!
'செருப்பாலடித்தா செலவுக்கு வாங்குவார்'
வாங்கட்டும்! வாங்கட்டும்! வட்டிமுடையட்டும் !
நாஞ்சிநாட்டுக்கு நன்மை யுண்டாகட்டும் !
"இனியுளகாலம் எக்காரணவனும்
காடும் மேடும் கரையும் சுற்றி
ஊணும் உறக்கமும் இன்றி உழைத்து
விளையும் விளைவெலாம் வீசித்தூற்றி
ஈரமும் பதரும் இல்லா தகற்றி,
சாக்கிலளந்து தலையில் எடுத்து,
மாதா மாதம், மருமகன் ராஜா
திருவுளங் கொண்டெழுந் தருளியிருக்கும்
*'கொட்டார'த்தில் கொண்டு சென்று
அவர்,
குறட்டைச் சுருதியில் 'கும்பகர்ணப்
படலம் அன்பாய்ப் பாராயணம் செயும்
காலமா யிருந்தால் காத்துநின்று—அல்லது
நடுமனைநீறி 'நாயும் புலியும்'
இஷ்டர்கள் கூட இருந்திழுக்கும்
வேளையாயிருந்தால் விலகிநின்று—அல்லது
புகையிலை வாயிற் போட்டுக்கொண்டு
பொடியும் மூக்கில் ஏற்றிக்கொண்டு
இறக்கு, வெட்டென இரைந்து கொண்டு
இடையிடை சண்டையும் எழுப்பிக்கொண்டு
பக்கமந்திரிகள் பலரொடும் கூட்டுக்
கச்சேரிசெயும் காலமாயிருந்தால்
ஓரிடம் மாறி ஒதுங்கி நின்று
தாயப் போர்க்கொரு தடைசெய் யாமல்
குடித்தனமில்லாக் குறிகளறிந்து
தடித்தனமில்லாச் சமயம் பார்த்து,
அரசே! பெருந்திரு அமுதுக்காக
இம்மாதத்துக் கேற்படும் நெல்லிதை
அளந்து களஞ்சியத்தாக்கிடக் கற்பனை
பாலித்தருள்வீர்" என்று பணிந்து
நிற்கும்படிக்கு நீயும் 'கோர்ட்டு'த்
தீர்ப்பைப் பெற்றுச் சீக்கிரம் வாபோ !
உள்ளநாளெல்லாம் உங்கட்காக நான்
உழைத்ததிந்த ஊரறியாதோ ?
பெண்டாட்டிக்கும் பிள்ளைகட்கும்
இத்தனை நாளாய் எத்தனை கொடுத்தேன் ?
உண்ணச் சோறும் உடுக்கத் துணியும்
கொடுத்தாலென்ன ? குறைவாய் விடுமோ ?
அடிமைகட் போலிவர் அத்தனைவேலையும்
செய்வது முனக்குத் தெரியாதோடா ?
வயலைப் பார்த்துவாவெனில் கிழட்டுப்
பயலே உனக்குப் பயித்தியம் என்பாய் !
கொத்தை அளந்து கொடு என்றால் நீ
வைத்த ஆளோ ? மாட்டேன் என்பாய் !
போன பூவில் புளியடிச் சூடு
வட்டம் தள்ளி வரும்போதுன்னிடம்
களத்தில் சென்று கண்காணியென்றேன் ;
அந்தப்படியே அவ்விடம் சென்று நீ
நிமிஷப் பொழுதில் நெல்லரைக் கோட்டை
கடத்திவிட்ட கதையுமெனக்குத்
தெரியாதோடா திருட்டுப் பயலே !
மறுநாள்
விடியற்காலம் விசாரிப்புகாரன்
சாக்குமிருபதாம் 'நம்பர் *ஷாப்பில்'
இருந்தது கண்டுவந் தென்னிடம் சொன்னான்;
வெளியில் சொன்னால் வெட்கமல்லவோ?
ஊரும் நாடும் ஒன்றாய்ச் சிரிக்குமே !
என்று பேசாதிருந்து விட்டேன்.
அடே,
செப்பில் கிடந்த திருக்குப் பூவன்
றெப்படி இறங்கி இரண்டாம் குடியாள்
கொண்டையில் சென்று குடியேறியது ?
என்னைக் குடும்ப தோஷியென்று
கூற வுனக்குவாய் கூச வில்லையோ ?
குடும்பத்துக்கொரு குறையும் வராமல்
காரியம் பார்க்கும் காரணவர்களில்
எல்லாவகையிலும் என்னைப் போல
நல்லவர் இந்த நாஞ்சிநாடு
பன்னிரண்டு படாகையிலுண்டோ ?"
என்று கூறினர். (தொடரும்.)

அரண்மனை.

கள்ளுக்கடை.

மாய மறைவு.

II

ஸ்ரீமாந் சங்கரக் குமாருப் பிள்ளையவர்கள்.

அன்றிரவு எட்டு மணி ஆனதும் ஸ்ரீநிவாஸன் பெண் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தான். கீழே பார்த்துக்கொண்டே ஊஞ்சலிட்டிருக்கும் மாமரத்தை நோக்கி நடந்தான். மரத்தின் பக்கத்தில் சிறு காகிதத் துண்டுகளும், ரோஜா மலரின் சில இதழ்களும் கிடந்தன. காகிதத் துண்டுகள் பங்கஜத்தைப் பற்றிய அறிவுகள் தாராவென்றுன்னி அவைகளைக் களைந்தான் ஆனல் மலரிதழ்கள் ஒருக்கால் பிரயோஜன முடையனவாயிருக்கக் கூடுமென்றுணர்ந்து, அவைகளைப் பரீக்ஷித்துப் பார்த்தான். சாதாரண மலரல்ல; இங்கிலாந்திலிருந்து கொண்டு வரப்பட்டு திருவனந்தையில் இரண்டொரு இடங்களில் மட்டும் பயிராயிருக்கின்ற "பிரின்ஸஸ் மேரி" என்ற செடியின் மலர். இயற்கையிலேயே நல்ல வாசனையுடையது. கேசாஞ்சனி தைலத்தின் மணமும் கலந்திருக்கின்றது. சற்று நேரத்துக்குமுன் யாராவது (அநேகமாக ஒரு பெண்) தலையிற் சூடியிருந்திருக்க வேண்டும். ஸ்ரீநிவாஸன் கிடைத்த மூன்று இதழ்களையும் தனது சேப்பிற் கிடந்த ஒரு சிறு தகரப் பெட்டியில் பத்திரப் படுத்திக் கொண்டான். ஊஞ்சலில் அமர்ந்து தான் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்தான். "பங்கஜம், காலையில் நடந்த கலகத்தின் நிமித்தம் எங்காவது ஓடிப்போய் விட்டாளோ? அல்லது தற்கொலைதான் செய்துகொண்டாளோ? ஒருக்கால் ஏதேனும் ஒரு காரணத்தால் யாராவது அவளை ஏமாற்றி மறைத்து வைத்திருக்கிறார்களோ? பங்கஜத்துடன் கடைசியாகப் பேசிக்கொண்டிருந்தவள், 25 வயதுடைய பெண்ணும். ஆனல் அவள் யாராயிருக்கலாம். அவளைக்கண்டு பிடிப்பது எப்படி. பங்கஜத்தின் காணுமைக்கு அவன் காரணமாயிருப்பாளோ? ஒருவேளை சுந்தரத்தின் ஆளாயிருக்கக் கூடும். சுந்தரம் பங்கஜத்தை விவாகம் செய்ய வேண்டுமென்று பலமுறை முயன்றவனல்லவா? அவன் தான் அந்தப்பெண்ணை ஏவி பங்கஜத்தை ஏமாற்றி அழைத்துக் கொண்டு வரும்படி சொல்லியிருப்பான். எதற்கும் சுந்தரத்தைக் கண்டு அவனுடன் தந்திரமாகப் பேசி ஏதாவது அறிவோம்" என்று பலவாறாக எண்ணி ஒரு முடிவுக்கு வந்து ஊஞ்சலிலிருந்து எழுந்து நடக்கலானான்.

பள்ளிக் கூடத்தின் வடபுறமாகச் செல்லும் சந்தின் வழியாக ஒருவன் தலையில் முக்காடிட்டு விரைவாகப்போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். அவனது நடையுடை பாவனைகளிலிருந்து அவன் சுந்தரமாயிருக்கக் கூடும் என்று சந்தேகித்து, ஸ்ரீநிவாஸன் அவன் பின் மறைவாகச் சென்றான். முக்காடிட்ட அம்மனிதன் கடைசியாக இப்பொழுது (Sunny Mede) "ஸண்ணி மீட்" என்றழைக்கப் படுகிற மாளிகையின் கீழ்புறத்திலிருக்கும் முடுக்கு வழியாகச் சென்று அந்த முடுக்கின் இறுதியிலிருந்த வீட்டின் தாழ்வாரத்தில் ஏறினான்.

அவ்வீடு தற்கால நாகரீகப்படி கட்டிய வீடு. அது புகையிலை வியாபாரம் செய்து கொண்டிருந்த "பாளையம்" சின்னக் கண்ணுப் பிள்ளைக்குச் சொந்தம். வியாபாரத்தில் பிள்ளை அவர்கள் 'கைதளர்ந்து' நாடுவிட்டு எங்கோ—இடம் நமக்குத் தெரிந்திருந்தாலும் சொல்வது நியாயமல்ல—ஓடிப்போய் விட்டார்.

திருநெல்வேலி கா. சு. வெ. உமையொருபாகம் பிள்ளை, சின்னக்கண்ணுப் பிள்ளை தனக்குக் கொடுக்க வேண்டிய மூவாயிரத்துச் சொச்சம் ரூபாய்க்காக திருவனந்தை ஜில்லாக்கோர்ட்டில் 'எக்ஸ்பாட்டி' விதிபிறப்பித்து வீட்டை ஜப்தி செய்து கொண்டார். இது பெரும்பாலாருக்கும் தெரியும். அந்த வீடு காற்றோற்றமும் கம்பீரமான தோற்றமுமுடையதாக விருந்த போதிலும் வாழ்க்கையற்றது. அநேகமாக இந்துகள் அதில் வசிக்கத் துணியார்கள். எப்படியானாலும் சரி, கதை நிகழும் காலத்துக்கு நாலைந்து மாதங்களுக்கு முன்னரே வீடு காலியாய் விட்டது. உமையொருபாகம் பிள்ளைக்கும வீட்டைப் பாதுகாக்கச் சௌகரியமில்லாது போயிற்று. மனிதர் வசிப்பது போய் வீட்டின் தாழ்வாரங்கள் ஊர் மாடுகளுக்கும், கூரை வௌவால்களுக்கும் உறைவிடமாயின. குப்பையும் கூளமும் நிறைந்து வீடு சீர் குலைந்திருந்தது.

இந்நிலைமையிலிருந்த வீட்டின் வாயிற் படியில அம்மனிதன் ஏறினதும் யாராவது தன்னைக் கவனிக்கிறார்களாஎன்று பார்த்துக்கொண்டு சற்றுநேரம் அங்கு நின்றான். பின்னர் வீட்டினுட் சென்று கதவை அடைத்துத் தாளிட்டுக் கொண்டான்.

பின்பற்றி வந்த ஸ்ரீநிவாஸன் தாழ்வாரத்திலேறிப் பார்க்க ஒன்றும் காணவில்லை. சில நிமிஷங்கள் கழிய வீட்டின் பின்புறத்துக்குச் சென்றான். வீட்டிற்குள் நுழைய ஒரு வழியிருப்பதைக் கண்டான். ஆனால் அது அடைக்கப்பட்டிருந்தது. அந்தக் கதவின் சாவித்துவாரம் வழியாக நோக்க வீட்டிற்குள் நுழைந்த வாலிபன் ஒரு சிறு நாற்கட்டில்மீது படுத்திருந்த சுமார் 50 வயதுடைய ஒருவனோடு வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் பேசினது தாழ்ந்த குரலிலிருக்க போதிலும் ஸ்ரீநிவாஸனுக்குக் கேட்கும்படியாக விருந்தது.

வாலிபன்—“ 50 ரூபாய் கொடுத்தேன் ”

மற்றவன்—“ எனனவானாலும் சரி! காரியம் அநுகூலமாயிற்றல்லவா? அவ்வளவு போதும்.”

வாலி—“ இனி நாம் என்ன செய்ய வேண்டும்.”

மற்ற—“ அவளைக் கொண்டு இதில் கையொப்பமிடும்படி செய்யவேண்டும். நயத்திலும் பயத்திலும் அவளை இடச் சொல்கிறேன். அதை என்னிடத்தில் கொடு ” என்றதும் வாலிபன் தனது சேப்பிலிருந்த ஒரு காகிதச்சுருளை எடுத்துக் கொடுத்தான். ‘மற்றவன்’ காகிதச்சுருள், இறகு, மை இவைகளுடன், எரிந்து கொண்டிருந்த மெழுகு வர்த்தியையும் எடுத்துக் கொண்டு வேறொரு அறைக்குப்போக எத்தனித்தான். அப்பொழுது,

வாலிபன் —“ அவள் ஏதாவது சொன்னாளா?” என்று வினவினான். அதற்கு

மற்றவன்—“ பேசவேயில்லை, கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள் என்று பதிலுரைத்தான்.”

இந்தச் சம்பாஷணையைக் கேட்டதும் ஸ்ரீநிவாஸனுக்குண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. இவர்கள் எந்தப் பெண்ணைக் குறித்துப் பேசுகிறார்களோ அந்தப்பெண் பங்கஜமாய்த்தான் இருக்க வேண்டுமென்று எண்ணி அதிக ஆவலுடனும், ஜாக்கிரதையுடனும் இனிஎன்ன பேசப்போகிறார்கள் என்று உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

வாலிபன்—“ அவளோடு எல்லாக் காரணங்களையும் எடுத்துக் கூறி என்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி கேட்கட்டுமா?”

மற்றவன்—“ என்னடா, ரெங்கா! (‘ரெங்கன்’ என்ற பெயரைக் கேட்டதும் ஸ்ரீநிவாஸன் சற்றுத்திடுக்கிட்டான்) உனக்கிவ்வளவு ஆத்திரமாகாதே! தாய் தந்தையரின் பிரிவாற்றாமைக்குக் கண்ணீர் வடித்துக் கதறிப் புலம்பிக் கொண்டிருக்கும் அவளிடத்தில் நீ போய், நீ இன்னாரென்று கூறிய மாத்திரத்திலேயே உன்னை வெறுப்பாள்; ஏசுவாள்; சபிப்பாள். மேலும் உன் மந்திரத்தில் மாங்காய் பழுக்காது. இரண்டொரு நாள் பொறுத்து சாவதானமாக, அவளைப் போய்ப் பார்க்கலாம். நாம் அவளை மறைத்து வைத்திருப்பதற்குக் காரணம் அவள் அறியக்கூடாது”

வாலிபன்—“ என்ன அண்ணா! இப்படி சொல்லுகிறீர்கள்? நீங்களும் ....”

மற்றவன்—“ அது அப்படித்தான். நீ ஒன்றுக்கும் ஆத்திரப்படாதே. உனக்கென்றே தலையைச் சுற்றிவிட்டிருக்கிறது.”

மற்றவன் இவ்வளவும் சம்பாஷித்துவிட்டு அடுத்த அறைக்குட் சென்றான்.

மேல் வரைந்துள்ள சம்பாஷணையைக் கேட்டதும் ஸ்ரீநிவாஸனுக்குப் பெரிதும் மனச் சமாதானமுண்டாயிற்று. பேசிக் கொண்டிருந்தவர்களே பங்கஜத்தை அந்த வீட்டிலாவது அல்லது பக்கத்திலுள்ள வேறெந்தக் கட்டிடத்திலாவது மறைத்து வைத்திருக்கக் கூடுமென்று தீர்மானித்தான்.

ரெங்கன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஸ்ரீநிவாஸன் சற்றுத் திடுக்கிட்டான் என்று மேலே சொன்னோமல்லவா? ரெங்கனது முகத்தை முதற்றடவையே பார்த்ததும் சுந்தரத்தின் சாயலாக விருந்தபடியால், அவன் சுந்தரத்தின் தம்பிதானோ என்று சந்தேகப் பட்டான். ரெங்கனென்ற நாமத்தையும் உடையவனாகையால் சுந்தரத்தின் தம்பிதான் என்று நிச்சயித்தான்.

மற்றவன் அயலறையுட் சென்றபின், ரெங்கன் தானிருந்த அறையிற் கிடந்த ஓர் பழைய கட்டிலின் மீது படுத்துச் சற்றுக் கண்ணயர்ந்தான்.

ஸ்ரீநிவாஸன், ‘மற்றவன்’ எங்கு சென்றான்? என்ன செய்கிறான்? என்றறிய ஆவல் கொண்டு பலவிதமாய்ச் சாய்ந்தும் சரிந்தும் பார்த்தும் அறைக்குள் திருஷ்டி செல்ல முடியாமலிருந்ததினால் வருத்தமடைந்து சாவித்துவாரம் வழியாகவே மேல் என்ன சம்பவிக்கப் போகிறது என்று பார்த்துக் கொண்டு இருந்தான். அறையினுட் சென்ற ‘மற்றவன்’ அரைமணி நேரம் கழித்து சடைத்த முகத்துடன்ரெங்கன் படுத்தி

ருந்த அறைக்கு வந்து, கட்டிலிற் கிடந்தவனைத் தட்டியெழுப்பி ஏதோ செவியிற் சொன்னான். சொன்னதொன்றும் ஸ்ரீநிவாஸனுக்குக் கேட்கவில்லை.

பேச்சு முடிந்ததும் 'மற்றவன்' "இன்றைக்கு என்றுமில்லாத உஷ்ணமாயிருக்கிறதே. எனக்கும் ரொம்ப ஆயாஸமாயிருக்கிறது. நான் இதோ இந்தக் காற்றில் படுத்திருக்கிறேன்" என்று சொல்லி ஒரு கோரைப்பாயைத் தரையில் விரித்து அழுத்தமான மரக்கட்டை ஒன்றைத் தலைக்கணையாக வைத்துப்படுத்துக் கொண்டான். இதற்குள் ரெங்கன் படுத்துக் கொண்டவனது களைப்பைத் தீர்க்க உன்னினவனாய் ஒரு சுவரலமாரி (Almyrah)யைத் திறந்து பெரியதோர் மண் ஜாடியை எடுத்துக் கொண்டுவந்து அதிலிருந்த கள்ளை ஒரு சிரட்டையிலூற்றி "அண்ணே இதைச் சாப்பிடுங்கள். இளைப்பாறிவிடும், தேகத்துக்கும் குளிர்ச்சியைத் தரும்" என்று சொல்லி மற்றவனுக்குக் கொடுத்தான். கள்ளின் உருசியறியவே உறங்கினவன் எழுந்து சிரட்டை சிரட்டையாக வாங்கிச் சாப்பிட்டான். ரெங்கனும் தன் கணக்குக்கு 10, 12 சிரட்டைகள் போட்டுக்கொண்டான். கொஞ்ச நேரத்தில் மண் ஜாடி காலியாயிற்று. கள் மயக்கத்தால் இருவரும் வாய்க்கு வந்தவாறு உளறிவிட்டு இருந்தவிருந்த இடங்களிற் படுத்துக் கொண்டார்கள். ஸ்ரீநிவாஸன் அவர்கள் நன்றாக தூங்கட்டும் வீட்டினுள் நுழைய உபாயந்தேடுவோமென்று எண்ணி, தன்னிருப்பிடத்திலிருந்து மெல்ல எழுந்தான். அப்பொழுது மணி 11க்கு மேலாயிற்று. சந்திரன் கார் மேகங்களால் மூடப்பெற்றதனால் எங்கணும் வெளிச்சம் மம்மலாகவே இருந்தது. காற்றும் சலனமற்று நிசப்தமாகவிருந்தது. ஆட் சந்தடி எல்லாம் அடங்கிப் போயிற்று. ஊளையிடும் நாய்களின் தொனிகள் இடையிடையே கேட்டன. வௌவால்கள், சுரிச்சல்கள் முதலிய இராப் பட்சிகள் 'க்ரீச் க்ரீச்' என்று அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன.

ஸ்ரீநிவாஸன் தன்னந்தனியே வீட்டின் பின்புறத்தில் உலாவிக்கொண்டு ஏதேதோ ஆலோசித்துக் கொண்டிருந்தான். பங்கஜத்தைக் கண்டு பிடிப்பதற்கு ஒன்றும ஆதாரமில்லாது இருந்ததுபோக, தக்க ஆதாரங்கள் கிடைத்ததைப் பற்றிச் சந்தோஷித்தான். இப்படிக் கிடைத்தது தெய்வ சங்கல்பமென்று எண்ணினான். பங்கஜத்தைக் கண்டு பிடிக்கவும் திருவருட் கடாட்சமிருக்க வேண்டுமென்று மனதாரப் பிரார்த்தித்தான்.

பின்னர் வீட்டைப் பலதரம் வலம் வந்தான். உள் நுழையத் தக்கதான வழியைக் கண்டானில்லை. கூரை ஓலையைப் பிரித்தெறிந்துதான் உள்ளே போகவேண்டுமோ என்று நினைத்தான். ஆயினுமென்ன? ஸ்ரீநிவாஸன் மிகவும் வைராக்கிய முடையவன். எப்படியாவது உட்செல்வதாகத் தீர்மானித்துப் பின்னும் சற்று நேரம் மௌனமாய் நின்று ஏதோ ஆலோசித்தான். ஒவ்வொரு கதவையும் ஜன்னல் கதவையும் மெல்லத் தட்டி நோக்க, ஒரு ஜன்னற் கதவு திறந்தது. அஜ்ஜன்னலில் கம்பிகளிடப்பட்டு இருந்தது. கம்பிகளை ஒடித்தாலன்றி உள்ளே நுழைவது அஸாத்தியம். கம்பிகளை ஒடிக்க எண்ணி அவைகளைப் பரீக்ஷித்துப் பார்க்க அவைகள் பளுவுள்ளவையாக விருந்தபோதிலும் துருப்பிடித்திருந்தமையால் இலகுவில்ஒடிபடுமென்றறிந்து ஒரு கம்பியைத்தன் முழுப்பலத்துடன் இழுக்கவே அது ஒடிபட்டது. இதுபோலவே மற்றொரு கம்பியையும் ஒடித்தான். கம்பி ஒடிந்த சத்தம் கேட்டு உள்ளே தூங்குகிறவர்கள் உணரக் கூடுமென்று பயந்து ஜன்னலை மெதுவாக அடைத்துவிட்டு மறைந்திருந்தான். ஒருவரும் உணரவில்லை என்று திடப்படுத்திக் கொண்டு ஒடிந்த கம்பிகளின் பக்கத்திலிருந்த மற்றக் கம்பியை வளைத்தான்; ஒடிக்க முடியவில்லை. தனக்கு நுழையப்போதுமான வழி உண்டாக்கிக் கொண்டான். வெற்றி அளிக்க வேண்டுமென்று தெய்வத்தைத் தியானித்துக் கொண்டு உள் நுழைந்து ஜன்னலை அடைத்துக் கொண்டு சேப்பிலிருந்த மெழுகு வர்த்தியை எடுத்துக் கொளுத்தி, தானிறங்கிய அறையைப் பார்த்தான். இந்த அறை ரெங்கன் படுத்துத் தூங்குமறைக்கு மூன்று அறைக்கு வடக்கிலிருந்தது. இந்த அறையின் மூலையில் சிறு மேசை, ஒடிந்த நாற்காலி, (ஸ்டூல்) பெட்டி இவைகளிருந்தன. தற்கால நாகரீகப் பெண்ணுடைகள் மேசைமீது கிடந்தன.

அவைகளை எடுத்து நன்றாகப் பார்த்தான். பங்கஜத்தின் உடைகளாக இருத்தல் கூடுமோ என்று ஐயமுற்றான். "ஜாக்கெட்டை" (Jacket) நோக்கியதில் அது 25 வயதுடைய பெண் இடத்தகுந்ததாயிருந்தபடியால் பங்கஜத்தின் ஆடைகளாக இருக்க மாட்டா என்று அநுமானித்தான். பின் தகரப் பெட்டியை நோக்க சில உடுப்புகளும் விசேஷமற்ற இரண்டொரு கடிதங்களுமிருந்தன. வேறோரறைக்குப் போக எத்தனிக்கையில் படியின் சமீபம் குலைந்த ரோஜாமலரின் இதழ்கள் கிடப்பதைக்கவனித்தான். அவைகளை எடுத்துநோக்கினான். அவைகளிலொன்றையும் தான் பத்

திரமாக வைத்திருந்த இதழ்களிலொன்றையும் ஒப்பிட்டுப் பார்க்க இரண்டும் ஒரே மலரின் இதழ்களென்றறிந்தான். மேசைமீது கிடந்த உடைகளை அணிந்து இப்பூவைத் தலையில் சூடியபெண்ணொருவள் பங்கஜத்தை ஏமாற்றி அழைத்து வந்திருக்கக் கூடுமென்றும் அனுமானித்தான். மேலும் அந்தப் பெண் அந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு சிநேகமுள்ளவளாய் இருத்தல் கூடுமென்றும், ஒருக்கால் அதே வீட்டில் வசிக்கக்கூடுமென்றும் ஊகித்தான். இப்படி இவன் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் மெதுவாகத் துக்கத்துடன் புலம்பிக் கொண்டிருக்கும் சத்தம் ஒன்று கேட்டது.

(தொடரும்)

மனக்கவலையும் தேகசுகமும்.

இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு ஸிவில் உத்தியோகஸ்தருடைய தேகம் மிகுந்த வெப்பத்தினாலும், ஓயாத வேலையாலும் நிரம்ப இளைத்துப் போயிற்று. ஆகவே தனக்கு ஏதாவது பிணிக்குறிகள் உண்டோ என்று அறிய அவர் ஒரு டாக்டரை நாடிச் சென்றார். டாக்டர் அவருடைய தேகத்தை நன்றாய் உற்றுப் பார்த்தார். ஹிருதயம், சுவாஸப்பை முதலிய உறுப்புகளின் நிலைமையை குழல் வைத்தும் அறிந்தார். எல்லாம் பார்த்துவிட்டு "நாளை உமக்கு எழுதுகிறேன். நீர் இப்பொழுது வீட்டுக்குப போகலாம்" என்று சொல்லி, டாக்டர் உத்தியோகஸ்தரை வீட்டுக்கு அனுப்பி விட்டார். அடுத்த நாள் டாக்டரிடமிருந்து சொன்னபடி எழுத்து வந்தது. அதில் கீழ் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"உமது தேகத்தில் சுவாஸப் பையின் இடது பாகம் அழிந்து போய்விட்டது. ஹிருதயமும் மிகச் சேதப் பட்டிருக்கிறது. ஆகையால் காலத்தை வீணாக்காமல் உமது ஆப்பீஸ் ஜோலியை எல்லாம் சரியாய் திட்டம் செய்து வையும். நீர் இன்னும் சில மாதங்கள் தான் ஜீவித்திருப்பீர். முக்கியமான விஷயங்களைத் தீர்மானம் செய்யாமல் விட்டு விடாதேயும்".

உத்தியோகஸ்தர் கடிதத்தைப் பார்த்து கூற்றுவன் தனக்குச் சாவோலை விடுத்ததாகப் பாவித்து ஏக்கம் கொண்டார். 24 மணி நேரத்துக்குள் அவருக்கு சுவாஸம் அடைத்தது. ஹிருதயத்திலும் சகிக்கொணாத நோவு உண்டாயிற்று. இனிப் பிழைக்க மாட்டோம் என்ற எண்ணத்துடன் பாயிற் படுத்துக் கொண்டார். இரவில் நோய் அதி தீவிரமாகவே அவருடைய வேலைக்காரன், டாக்டரைக் கூட்டிக்கொண்டு வர ஆள் விடுத்தான்.

டாக்டர் வந்து பார்வையிட்டு, "நான் உம்மை இதற்கு முன் பார்க்கும் பொழுது இம்மாதிரிக் குறிகள் ஒன்றும் காணவில்லையே. அதற்குப் பின் உம்முடைய தேகத்துக்குக் கெடுதி வரும்படி நீர் என்ன செய்து கொண்டீர்?" என்றார்.

நோயாளி—"என்னுடைய ஹிருதயம் தான் என்னை வருத்துகின்றது போலிருக்கிறது" என்று மெல்லிய குரலில் மொழிந்தார்.

டாக்டர்—"உம்முடைய ஹிருதயம் நேற்றுச் சரியான நிலைமையிலிருந்ததே"

நோயாளி—"பின், என்னுடைய சுவாஸப் பையாயிருக்கலாம்"

டாக்டர்—நோயாளியின் நிலைமையைக் கூர்மையாகக் கவனித்து அறிந்து "உமக்கு என்ன சம்பவித்திருக்கக் கூடும்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! நீர் பானீயம் ஒன்றும் சாப்பிட்டுக் கொள்ள வில்லையோ" என்றார்.

நோயாளி—"இல்லை, ஐயா, உமமுடைய எழுத்து" என்று சொல்லிவிட்டுப் பெருமூசசெறிந்தனர் "நீர் நான் சில மாதங்கள் தான் ஜீவித்திருப்பேன் என்றீரே"

டாக்டர்—"உமக்கென்ன பைத்தியமா? நீர் சிலமாதம் இராஜா எடுத்துக் கொண்டு உதகமண்டலத்திலோ நீலகிரியிலோ போய்த் தாமதித்தால் சுகம் பெறலாம் என்றல்லவோ எழுதியிருந்தேன்."

நோயாளி பதில் ஒன்றும் சொல்லாமல் தன் தலையணைக் கடியில் வைத்திருந்த எழுத்தை யெடுத்து "இதோ பாரும்" என்று டாக்டர் கையில் கொடுத்தார். டாக்டர் அதை விரைவாகப் பார்த்துவிட்டு "ஐயையோ, நான் வேறொருவருக்கு எழுதிய எழுத்தன்றோ விது! என் குமஸ்தா கடிதத்தைப் பிசகாய் உமக்கனுப்பி விட்டான்" என்றார். இவ்வளவும பேசி முடிந்தவுடன் உத்தியோகஸ்தர் தாமே படுக்கையிலிருந்து எழுந்து நிமிர்ந்து இருந்தார். நோயும் வெகு சீக்கிரத்தில் குணத்துக்கு வந்தது.

மேற் சொன்ன எழுதது நியாயமாய்ப் போய்ச் சேரவேண்டிய மற்ற நோயாளியின் கதி என்னவாயிற்று? உத்தியோகஸ்தருக்கு வரவேண்டிய எழுத்து அவருக்குக் கிடைத்தது. அவர், மலையிற் போய்த் தாமதித்தால் குணம அடையலாம என்ற செய்தியை அக்கடித மூலம அறிந்து சந்தோஷ முற்று, அங்ஙனமே செய்தார. ஐந்து வருஷத்துக்குப் பிறகும் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக அவரைக் காணப் போன ஒருவர் அறிந்தார.

மனக்கவலை உடலைக்குறுக்கும், சந்தோஷம் உடலைப் பூரிப்பிக்கும என்பது இதிலிருந்து நன்கு விளங்குகின்றதல்லவா? "கவலை கழியைத் தின்னும், எண்ணம் சாலைத்தின்னும்" என்னும் பழமொழியும் இங்கு கவனிக்கத் தக்கது.